பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 05 சனிக்கிழமை 21.12.2019 கதிர் 46

## இனி இது ரகசியம் அல்ல!

கொழும்பிலிருந்து பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவர் நேற்றிரவு தொலைபேசி அழைப்பு எடுத்தார். தெற்கு அரசியல் விவகாரங்கள் தொடர்பில் உள்வீட்டு விடயங்கள் எல்லாம் பெரும்பாலும் அவருக்கு அத்துப் பக்கம் 02 »

# யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்கு முன் அடாத்தாக வந்திறங்குகிறார் விஜயன்

## தடைகளை மீறி அனுமதியின்றி சிலைகளை வீதியோரத்தில் வைக்கிறது சிறை நிர்வாகம்

### அவசர அவசரமாக இன்று திறப்பு நிகழ்வுக்கு ஏற்பாடு?





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்.டிசெம்பர்.21

யாழ்ப்பாணம், பண்ணை கடற்கரையோரமாக புதிய சிறைச்சாலைக் கட்டடத்துக்கு முன்பாக வீதி அதிகார சபைக்குரிய இடத்தை ஆக்கிரமித்து விஜயன் – குவேனி சிலைகளை சட்டவிரோதமான முறையில் வல்வந்தமாக நிறுவி, அவசர அவசரமாக அவற்றைத் திறந்து வரலாற்றுத் திரிப்பையும் திணிக்க யாழ். சிறைச்சாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்திருப்பதாக நம்பிக்கையாக அறியவருகின்றது. பக்கம் 02 »

## ரணிலும் சிக்குவாராம்!



கொழும்பு, டிசெ. 21

சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதை பக்கம் 03 »

## ஒரே குடையின் கீழ் போராட வாருங்கள்!

### காணாமற்போனோர் விடயத்தில் மன்னார் பிரஜைகள் குழு அழைப்பு



மன்னார், டிசெ. 21

நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒரு குடையின் கீழ் ஒன்றித்துப் போராடினால் மட்டுமே எமது போராட்டத் பக்கம் 03 »

## வடக்கு முதல் பெண் ஆளுநராக திருமதி சாள்ஸ் நேற்று நியமனம்



கொழும்பு, டிசெ. 21

வடக்கு மாகாண ஆளுநராக இலங்கை நிர்வாக சேவை மூத்த அதிகாரி திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் பக்கம் 03 »

## பொதுத் தேர்தலின் பின்னரே அரசியல் கைதிகள் விடுதலை

### கூறுகின்றார் அங்கஜன் எம்.பி.




யாழ்ப்பாணம், டிசெ. 21

பொதுத் தேர்தலின் பின்னரே அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியமாகும் எனத் தான் நம்புகிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் பக்கம் 03 »

## மணல் கொள்ளையில் ஈடுபட்ட 25 பேரை மடக்கியது பொலிஸ்!

### 25 வாகனங்களும் பளையில் தடுப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 21

சட்டவிரோதமாக மண் அகழ்வில் ஈடுபட்ட 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர். பக்கம் 03 »

## குடாநாட்டில் அதிகாலைவேளை மூன்று வழிப்பறிக் கொள்ளைகள்!

### கைதுசெய்ய முற்பட்ட சந்தேகநபர் நஞ்சருந்தி உயிரை மாய்க்க முயற்சி

யாழ்ப்பாணம், டிசெ.21

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் புன்னாலைக்கட்டுவன் மற்றும் உரும்பிராய் பகுதிகளிலும், கோப்பாய் பொலிஸ் பிரிவிலும் நேற்று அதிகாலை மூன்று வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள் பக்கம் 03 »

## ஷானி அபேசேகர உரிமை மீறல் மனு!

கொழும்பு, டிசெ. 21

குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உயர்நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் பக்கம் 03 »

## ராஜிதவின் முன் பிணை மனு; நீதிமன்று நேற்றுத் தள்ளுபடி!

கொழும்பு, டிசெ. 21

தம்மைக் கைது செய்வதற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிடுமாறு கோரி, முன்னாள் அமைச்சர் பக்கம் 03 »

## ரி.ஐ.டி. விசாரணைக்காக சென்றவரைக் காணோம்!

யாழ்ப்பாணம், டிசெ. 21

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் (ரி.ஐ.டி) விசாரணைக்குச் சென்றவரை காணவில்லை என பக்கம் 03 »

## காணாமற்போன குடும்பஸ்தர் நானாட்டானில் சடலமாக மீட்பு



மன்னார், டிசெ. 21

மன்னார் – நானாட்டான் நறுவிலிக்குளம் பகுதியில் காணாமல் போயிருந்த இளம் குடும்பஸ்தர் நேற்றுச் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை பக்கம் 02 »

## சிறைக்குச் சென்று சம்பிக்கவை சந்தித்தனர் ரணில்,மனோ அணி



கொழும்பு,டிசெ.21

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவை ஐக்கிய பக்கம் 03 »

# தென்மராட்சிக் கம்பன் விழா இரண்டாம் நாள் நிகழ்வு

தென்மராட்சி இலக்கிய அணி, சங்கத்தானை சாவகச்சேரி தமிழ்க் கோட்டத்தில் நடத்தும் இரண்டு நாள் கம்பன் விழா இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகின்றது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாம் நாள் நிகழ்விற்கு யாழ்.பல்கலைக்கழகப் பொருளியற்றுறைத் தலைவர் பேராசிரியர் செ.சந்திரசேகரம் தலைமை வகிப்பார்.

காலை நிகழ்வில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் 'வாழ்வியல்கம்பன்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறும்.

'கம்பன் காட்டும் மாணவன்' என்ற தலைப்பில் பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன், 'கம்பன் காட்டும் அமைச்சன்' என்ற தலைப்பில் பேராசிரியர் தி.வேல்நம்பி, 'கம்பன் காட்டும் வீரன்' என்ற தலைப்பில் க.குமாரதாசன், 'கம்பன் காட்டும் ஆசிரியன்' என்ற தலைப்பில் கலாநிதி ஆறுமுருகன், 'கம்பன் காட்டும் மன்னன்' என்ற தலைப்பில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

நாளை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சிக்கு கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமை வகிப்பார்.

மாலை நிகழ்வில் கலாநிதி ஆறுதிருமுருகனுக்கு விசேட விருது வழங்கப்படுகின்றது.

'படைத்தவனைச் சந்திக்கும் பாத்திரங்கள்' என்ற தலைப்பில் இறுதியாக நடைபெறும் நிகழ்வில் கம்பராக கம்பவாரிதி இ. ஜெயராஜ்ம் அவரின் சீடர்களாக அ.வாசுதேவா, க.சிந்துஜன் ஆகியோரும் பங்குபற்றுவர்.

இராமனாக – வே.ஞானசம்பந்தன், இராவணனாக – திரு.ந. ஐங்கரன், பரதனாக – இ.சாமிலன், இலக்குவனாக – ச.சங்கர்ஜி, குகனாக – செ.செல்வரமணன், வாலியாக – த.கருணாகரன், கைகேயியாக – க.சிவனுஜன், கூனியாக – சோ.சோகுலன், சுக்கிரிவனாக – வே.உதயகுமார், இந்திரஜித்தனாக – ற.நிஷாந்தன் , சூர்ப்பனகையாக செல்வி த.வராகினி ஆகியோர் இந்நிகழ்வில் பங்குபற்றுவர்.

## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல் காணாமற்போயிருந்த அவர் நறுவிலிக்குளம் பகுதியில் உள்ள பொது மயானப் பகுதியில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

நானாட்டான் பிரதேசசபையில் வெளிக்கள உத்தியோகத்தராக கடமையாற்றி வந்த அன்ரனிஸ் நிமால் (வயது-30) என்ற குடும்பஸ்தர், கடந்த சனிக்கழமை காலை 8 மணியளவில் வேலைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றார். இரவாகியும் அவர் வீடு திரும்பாத காரணத்தால் அன்று இரவு 11 மணியளவில் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் மனைவி முறைப்பாட்டைப் பதிவு செய்திருந்தார்.

முருங்கன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்ததோடு குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் தொடர்ச்சியாக அவரைத் தேடி வந்தனர்.

இந்நிலையில், சடலம் ஒன்று கிடப்பதாக வயோதிபர் ஒருவர் பங்குத் தந்தை, பொலிஸார் மற்றும் கிராம அலுவலகர் ஆகியோருக்கு தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மற்றும் விசேட தடவியல் நிபுணத்துவப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது காணாமற்போன தனது கணவனின் சடலமே அது என அவரது மனைவி அடையாளம் காட்டினார். பின்னர் மன்னார் பதில் நீதிவான் இ.கயஸ்பெல்டானோ நேற்று பிற்பகல் 2 மணியளவில் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

பின்னர் பதில் நீதிவானின் உத்தரவுக்கு அமைவாக பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (ஐ)

## யாழ்ப்பாணச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் கொண்டு வந்து நிலை நிறுத்தப்பட்டு, சீலையால் மூடிக் கட்டப்பட்டிருக்கும் இச்சிலைகள் பெரும்பாலும் சத்தம் சந்தடியின்றி இன்று திறந்து வைக்கப்படவிருக்கின்றன என நம்பகமாக அறியவந்தது.

யாழ்.மாநகரச சபைக்கு உட்பட்ட, யாழ்.பண்ணைக் கடற்கரைக்கு அருகில், யாழ்ப்பாணம் புதிய சிறைச்சாலை வளாகம் அமைந்துள்ளது.

இந்தச் சிறைச்சாலைக்கு முன்பாகவுள்ள வீதி, நேரடியாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது. ஐம்பது அடி அகலமாக இருக்க வேண்டிய இந்த வீதி, ஏற்கெனவே அதிலும் விடப் பெருமளவு குறைந்த அகலத்திலேயே உள்ளது. அப்படி இருக்கையில், அதிலும் சுமார் பத்தடி அளவு அகலப் பகுதி சிறைச்சாலை நிர்வாகத்தினால் அபகரிக்கப்பட்டு – அல்லது அத்துமீறப்பட்டு – அதில் புனரமைப்புப் பணிகள் போன்று சில வேலைகள் சில நாள்களாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

சிறைச்சாலையின் சுவரில் கடற்கரையில் கப்பல் ஒன்று வந்து தரிக்கின்றமையயை சித்திரிக்கும் ஓவியம் வரையப்பட்டுள்ளது. அதிலிருந்து இறங்கி வரும் விஜயனின் சிலை வீதியை நோக்கியபடியும் விஜயனுக்கு குடைவட்டம் பிடிக்கும் ஒருவரின் சிலை பின்னாலும் உள்ளவாறு அவை இரண்டும் நிலை நிறுத்தப்பட்டுள்ளன. கப்பலிருந்து இருந்து இறங்கி வரும் விஜயனை (வீதிப் பக்கத்தியிருந்து) குவேனி வரவேற்பது போன்ற பாணியில் மூன்றாவது சிலை நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சிலைகள் அனைத்தும் சீலைகளினால் மூடி கட்டப்பட்டுள்ளன.

இன்று யாழ்ப்பாணம் வரும் சிறைச்சாலை ஆணையாளர் அதனை திறந்து வைக்கக் கூடிய வகையில் ஏற்பாடுகள் அவசர அவசரமாக முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அறிய வந்தது.

இந்தச் சிலை அமைப்புத் தொடர்பாக சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பிடமும் – வீதி அதிகார சபையிடமோ அல்லது யாழ்.மாநகர சபையிடமோ – சிறை நிர்வாகம் அனுமதி ஏதும் பெறவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

பொதுவாக இத்தகைய சிலைகள், தெய்வவிக்கிரகங்கள் போன்றவை பொது இடங்களில் அமைப்பதாயின் அதற்கு சம்பந்தப்பட்ட மாகாணத்தின் முதலமைச்சரிடம் எழுத்து மூல முன் அனுமதி பெற வேண்டும் என்பது விதி.

முதலமைச்சர் இல்லாவிட்டால் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம் எழுத்து மூல அனுமதிபெறலாம். அதுவும் இந்தச் சிலைகள் விடயத்தில் பெறப்படவில்லை எனத் தெரிகின்றது.

எனினும் இப்படி வீதி அதிகார சபைக்குரிய பகுதியில் அத்துமீறி கட்டமைப்பு வேலைகளைச் செய்வது தவறு என்று யாழ்.சிறைச்சாலை நிர்வாகத்துக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இப்பிராந்தியத்துக்கான அலுவலகம் எழுத்துமூலம் அறிவுறுத்தியிருந்தது என அறியவந்தது.

எனினும் இப்படி ஒரு கடிதம் எழுதியமைக்கு மேல் இத்தகைய அத்துமீறல் நடவடிக்கையைத் தடுப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை எந்தநடவடிக்கையும் எடுத்தாகத் தெரியவில்லை.

சிலைகள் இன்று திறந்து வைக்கப்பட்ட பின்பு நாளை மறுதினம் திங்கட்கிழமை, விடுமுறை முடிந்து அலுவலகங்கள் திறக்கப்பட்ட பின்னர், பொலிஸ் முறைப்பாட்டுக்கோ அல்லது நீதிமன்றுக்கோ வீதி அபிவிருத்தி அதிகார சபை செல்லக் கூடும் என ஊகிக்கப்படுகின்றது.

இவ்விடயம் குறித்து சட்டரீதியான நடவடிக்கைகளை முற்கூட்டியே எடுப்பதற்கு வாய்ப்பிருந்தும் அதனை மேற்கொள்ளாதமை ஏன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எழுத்துமூல அறிவுறுத் தலையும் மீறி சிறைச்சாலை நிர்வாகம் அடாத்தாக நடக்கும் போது வீதி அபிவிருத்தி அதிகார சபை என்ன செய்தது என்பதைத் கேட்டுத்தெளிந்து கொள்வதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இப்பிராந்தியத்துக்கான நிறைவேற்றுப் பொறியியலாளர் இராதா கிருஷ்ணனோடு தொலைபேசியில் தொடர்புகொண்டோம்.

ஊடகங்களுடன் தாம் போச முடியாது எனக் கூறி அவர் தொலைபேசி இணைப்பைத் துண்டித்தார்.

இதேசமயம், யாழ்.மாநகர சபை மேயர் ஆர்னோல்ட் தற்சமயம் யாழ்ப்பாணத்தில் இல்லாத நிலையில் இவ்விடயம் குறித்து அறிந்து கொண்ட பதில் முதல்வர் து.ஈசன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் என். லோகதயாளனைக் கூட்டிக்கொண்டு நேற்று மாலை சம்பந்தப்பட்ட இடத்துக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

மேற்படி சிலைகள் துணியால் மூடிக்கட்டியிருப்பதால் அவற்றைப் பார்வையிட முடியாது என பதில் முதல்வருக்கும் மாநகர சபை உறுப்பினருக்கும் அங்கு பதிலளிக்கப்பட்டதாகத் தெரிய வந்தது.

இந்த அடாத்தான அத்து மீறல் நடவடிக்கைக்கு எதிராக – அந்தச் சிலைகள் இன்று திறந்து வைக்கப்பட முன்னரே – பொதுமக்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதத்தில் இன்று காலை அங்கு அமைதியான கவனவீர்ப்புப்போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு சில தரப்பு கள் முயன்று வருகின்றன என நேற்றிரவு அறியவந்தது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படியாக இருக்கும். தமிழர் பக்கச் செய்திகளை அறிவதற்கு அவர் என்னை நோண்டுவார். தென்னிலங்கை உள்சூக்குமங்களை அறியநான் அவரைக்குடைவேன். நேற்றுத் தொலை பேசி அழைப்பு எடுத்ததும் அவரிடமிருந்து கேள்வி பிறந்தது.

*"என்ன செய்தி?"* – என்று கேட்டார்

*"ஒன்றும் இல்லை. எல்லாம் வெறிச்சோடிக் கிடக்கின்றன. எந்த அசுமாத்தமும் இல்லை"* – என்றேன் நான்.

''Still waters runs deep'' (அசையாத நீர் ஆழமானது) என்றார்.

*"விளங்கவில்லையே...!"* – என்றேன் நான்.

*"வெளியில் அசுமாத்தம் தெரியாமல் அமைதியாக இருந் தால் உள்ளே ஆழம் அதிகம்"* என்று பொடி வைத்துப் பதில் தந்தார்.

அப்போதும் எனக்கு விளங்கவில்லை. என்ன, ஏது என்று அப்பாவியாக விசாரித்தேன்.

*"இராஜதந்திர விடயங்கள் கட்ட விழும்போது வெளியில் ஆரவாரம், அசுமாத்தம் இருக்காது. அசையாத நீர்போல நிலைமை வெளியில் அமைதியாகத்தான் தோற்றும். ஆனால் உள்ளே ஆழம் – விவகாரம் – இருக்கும்'* – என்றார்.

ஏதோ ஒரு விவகாரத்தை வைத்துக்கொண்டுதான் துழாவுகின்றார் என்று புரிந்தது. மெல்ல மேலும் நோண்டினேன்.

புதிய அரசுத்தலைமை குறித்து புதுடில்லி அதிக அதிருப்தியில் இருப்பதாகக் கோடி காட்டினார்.

★ அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீன நிறுவனத்துக்குக் கொடுத்தது கொடுத்ததுதான். அது தொடர்பான வணிக ஒப்பந்தத்தை மீளச் சீர்செய்வது குறித்துக் கூட சீனாவுடன் பேசமாட்டேன் என்று இலங்கையின் புதிய ஜனாதிபதி அறிவித்துவிட்டார்.

அந்த அறிவிப்பை வரவேற்று, புதிய ஜனாதிபதியின் கொள்கை நிலைப் போக்கை சிலாகித்து மெச்சி, இலங்கைக்கான சீனத் தூதரகம் ஓர் அறிக்கை கூட வெளியிட்டிருப்பது புதுடில்லிக்குப் புண்ணில் புளி பாய்ச்சியமை போன்ற கடுப்பைத் தந்துள்ளது.

★ மத்தள சர்வதேச விமான நிலையம் இந்திய நிறுவனங்களுக்குக் கையளிக்கப்படமாட்டாது எனப் புதிய ஜனாதிபதி கோட்டாபய வெளிப்படையாக அறிவித்து விட்டார்.

★ 13 ஆவது திருத்தத்தின் கீழ் அதிகாரப் பகிர்வைத் தமிழருக்கு வழங்குங்கள் என்று புதுடில்லியில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபயவையும் வைத்துக் கொண்டு ஊடகவியலாளர் மாநாட்டில் இந்தியப் பிரதமர் மோடி அறிவிக்க, அதைச் செவிமடுத்த இலங்கை ஜனாதிபதி, அந்த ஊடகவியலாளர மாநாட்டின் பின்னர், தாம் புதுடில்லியை விட்டுப் புறப்பட முன்னர், 13ஆம் திருத்தத்தின் கீழான அதிகாரப் பகிர்வு கிடையவே கிடையாது என்ற சாரப்பட பகிரங்கப் பேட்டி கொடுத்துவிட்டுத்தான் புதுடில்லியை விட்டுப் புறப்பட்டார்.

★ போதாக் குறைக்கு அதிகாரப் பகிர்வு என்ற விவகாரமே இல்லை, அபிவிருத்தி குறித்து வேண்டுமானால் பேசலாம் என்ற சாரப்பட தமது இறுக்கமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இரண்டொரு நாள்களுக்கு முன்னர் புதிய ஜனாதிபதி கோட்டாபய விடுத்த பகிரங்க அறிவிப்பு இந்தியப் பிரதமர் மோடிக்கும் சேர்த்து விடுக்கப்பட்ட பதிலடி என்றே புதுடில்லிய கருதுகின்றது.

★ மாகாண ஆளுநர்கள் நியமனம் ஜனாதிபதியின் தனிப்பட்ட சிறப்புரிமை என்றாலும் நல்லிணக்கம், புரிந்துணர்வு, அரசியல் சமரசம் ஆகியவற்றை அந்த நியமனங்கள் மூலம் பிரதிப்பலிப்பதற்குக் கிடைத்த வாய்ப்பை ஜனாதிபதி கோட்டபய உரிய முறையில் பிரயோகிக்கத் தவறிவிட்டார் – அதுவும் உரிய ஆலோசனைகள் கிடைத்த பின்னரும் கூட – என்ற ஆதங்கம் புதுடில்லிக்கு உள்ளது.

– இப்படி பல விடயங்களை விவரித்த அவர், இவற்றோடு நேற்றுக் கூட்டமைப்பின் தலைவர் இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றமையையும், இந்தியாவில் அவர் பத்து நாள்கள் தங்கியிருக்கின்றமையையும் சேர்த்துக் கூட்டிக் கழித்துப் பாருங்கள் என்றார்.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சென்னைக்குத் தான் செலகின்றார் – அதுவும் தனிப்பட்ட பயணமாக என்று கூறப்படுகின்றது என்ற தகவலை நான் அவருக்குச் சொன்னேன்.

அவர் பதிலுக்குச் சிரித்தார்.

தேவையானால் சென்னையிலிருந்து காலையில் விமானத்தில் புறப்பட்டு, புதுடில்லியில் வேலைகளை முடித்துக்கொண்டு, மாலையிலேயே விமானத்தில் சென்னை திரும்பிவிடலாம் என்றார் அவர்.

*"ஏன் ஊடகவியலாளர் என்ற முறையிலும் – அதற்கு அப்பாலும் – உங்களுக்கே அந்த அனுபவம் இருந்திருக்குமே!"* – என்றார் யுத்த காலத்தில் எனது பங்கு, பணிகள் பற்றிய சில விடயங்களை மேலோட்டமாக அறிந்திருக்கும் அந்த சிரேஷ்ட ஊடக நண்பர்.

நானும் பதிலுக்குச் சிரித்து வைத்தேன்.

டெல்லியில் இப்போது கடும் குளிர். வயதான காலத்தில் திடீரென டெல்லிக் காலைநிலைக்குள் சிக்கி சம்பந்தன் சமாளிப்பாரா என்பது சந்தேகம்தான்.

அதனால் அவரை ஒட்டிய விடயங்கள் சென்னையில் அவரைத் தேடி வந்து நடந்தாலும் நடக்கலாம் என்று ஆரூடம் கூறினார் அவர்.

இவை எல்லாவற்றையும், கூட்டிக் கழித்துப் பாரும். ஓரளவு நிலை புரியும் – என்றும் கூறினார்.

விடயங்கள் போகின்ற போக்கு, ஆளும் தரப்பின் சிரேஷ்ட மட்டத்திலும் கூடக் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக அவர் சொன்னார்.

அரசியல், நிர்வாகம், சர்வதேச உறவுகள் போன்ற விடயங்களில் முன் அனுபவம் இல்லாத நிலைமை, முதிர்ச்சியில்லாப் பண்பு என்பன விடயங்களைப் போட்டடிக்கப் பண்ணி விடுமோ என்ற ஆதங்கம் – அச்சம் – பழைய வருக்கு (அண்ணருக்கு) என்றும் தகவல்.

இவற்றைப் பற்றி எல்லாம் குறிப்பிட்ட அந்த நண்பர் கடைசியாக ஒரு விவகாரத்துக்கு வந்தார்.

*"புதிய ஜனாதிபதி கோட்டாவுக்குத் தாம் நேரடியாக அரசியல் செய்ய விரும்பும் பிரதேசங்கள் மூன்று. மேல் மாகாணம், கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணம். மூன்றுக்குமே அவர் ஆளுநர்களாகப் பெண்களையே நியமித்திருக்கின்றார். அவர்கள் மூவருமே அரசியல் அனுபவமற்றவர்கள். அதிலும் வடக்கு மாகாண ஆளுநர் சிவில் அதிகாரி. மூவருமே எல்லா விடயங்களையும் தான் விரும்பும் வகையில் முன்னெடுப்பர் என்று ஜனாதிபதி கோட்டபாய கருதுகின்றார். அரசியல் அனுபவமற்ற, அதில் தேர்ச்சியோ, முதிர்ச்சியோ, அறிவோ அற்ற பெண்மணிகள் என்பதால் இந்த மூன்று மாகாணங்களிலும் தனது அரசியல் கோலோச்சுவதற்கு அதுதான் வகையானது, வசதியானது, இடைஞ்சலற்றது என்று நம்புகின்றார் கோட்டாபய"* – என்றார் அந்த நண்பர்.

வடக்கு மாகாண ஆளுநர் நியமனக் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் நேற்றுப் பெற்றுக் கொள்ளும் படத்தைப் பார்த்தேன். படத்தில் வெளிப்படும் body language எனது ஊடக நண்பர் குறிப்பிட்ட செய்தியை உறுதிப்படுத்துமாற் போல தோன்றியது.

இந்த விடயம் குறித்து நாங்கள் ஒரு தீர்மானத்துக்கு வருவது, காலம் முந்திய செயல் என்று நினைக்கிறேன். ஆகவே பொறுத்திருந்து பார்ப்போம்.

ஆனால் எது, எப்படியென்றாலும் அந்த நண்பர் நேற்றிரவு கூறிய விடயங்களில் ஆழமான அர்த்தங்கள், அம்சங்கள், உண்மைகள் பொதித்திருக்கின்றன என்றே எனது மனதுக்குப் பட்டது.

– மின்னல் –

## ரணிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போன்று பிணைமுறி மோசடி தொடர்பிலும் சட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் – சம்பிக்க ரணவக்க தொடர்பில் பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வுதிணைக்களத்தினர் செயற்பட்ட விதத்தின் அடிப்படையில் எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் ரணில் விக்ரமசிங்கவும் இவ்வாறு கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்படுவார்.

5 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மத்திய வங்கி மோசடி தொடர்பில்தேவையான அனைத்து தகவல்களும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கோட்டாபயராஜபக்ஷசட்டத்தை நடைமுறைப்படுத்தும் விதத்தின் அடிப்படையில் ரணில் விக்ரம சிங்க விரைவில் கைது செய்யப் படுவார் – என்றார். (ஐ)

## வடக்கு முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை அலுவலர் ஒருவரை அவரது சேவைக்கான வரப்பிரசாதங்களுடன் ஆளுநர் பதவிக்கு நியமிப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அமைச்சரவை கடந்த புதன்கிழமை ஒப்புதலை வழங்கியிருந்தது.

இந்த நிலையில் வடக்கு மாகாண ஆளுநராக அவர் நேற்றுக் காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டார்.

வடக்கு மாகாணத்தின் முதலாவது பெண் ஆளுநராக அவர் தனது கடமைகளை அடுத்த வாரம் பொறுப்பேற்கவுள்ளார். (ஐ)

## ஒரே குடையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தின் வலு அதிகரிக்கும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுடனான விசேட சந்திப்பு நேற்றுக் காலை மன்னார் கலையருவி மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் போராட்டத்தை வேறு முறைகளில் கையாளவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தருகின்றோம் எனக் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் தெரிவிக்கின்றது. எங்கள் போராட்டம் இவர்கள் தரும் 6 ஆயிரம் அல்லது 12 ஆயிரம் ரூபாவுக்குள் முடக்கப்பட்ட போராட்டம் இல்லை.

நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒரு குடைக்குள் வர வேண்டும். நாங்கள் ஒன்றாகச் செயல்பட்டால் மட்டுமே எமது போராட்டத்தின் வலு அதிகரிக்கும்.

காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள் இல்லை என்று சொல்லக்கூடாது. அவர்கள் இல்லை என்று சொன்னால் எங்கே அவர்கள்? இருந்தால் எங்களிடம் ஒப்படையுங்கள். அதன் பின் விசாரணைகளைச் செய்யுங்கள் என்கின்ற நியாயமான கோரிக்கையே எம்மிடம் உள்ளது.

எமது கோரிக்கை சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட கோரிக்கை. எமது கோரிக்கையை அரசு ஏற்றுக் கொள்ளுகின்ற விதத்தில் முன்னெடுத்து எமது போராட்டத்தைத் தொடர்ந்து முன்நகர்த்த வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியிலே ஒற்றுமை இல்லை. எல்லா இடத்திலுமே பிரிவுகள் உள்ளன. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைப் பார்த்தால் பிரிந்து காணப்படுகின்றது. தமிழர்களுக்கு ஒரு தீர்வைக் கொடுக்க முடியாத நிலை உள்ளது. வடக்கில் ஒரு ஆளுநரை நியமிக்க முடியாத நிலை காணப்பட்டது.

இப்படியாக ஓர் அரசியல் சூழ்நிலை காணப்படுகின்ற நிலையில் எங்கள் போராட்டக் களத்திலே நாம் தெளிவாக இருக்க வேண்டும் – என்றார். (ஐ)

## மணல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அத்துடன், 15 டிப்பர் வாகனங்களும், 10 உழவு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் அவர்கள் கூறினர்.

கிளிநொச்சி, பச்சிளைப்பள்ளிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சோரன்பற்று, கிளாலி, தர்மக்கேணிப் பகுதிகளில் சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வதை எதிர்த்து மக்கள் பச்சிளைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு முன்பாக கடந்த 17ஆம் திகதி ஏ–9 வீதியை மறித்துப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்துப் பளை பொலிஸாரினால் பளைப் பகுதிகளில் சட்டத்துக்கு முரணாக மண் அகழ்ந்த 15 டிப்பர் வாகனங்களும், 10 உழவு இயந்தரங்களும் சுற்றிவளைப்பின் மூலம் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் 21 பேர் ஆள் பிணையில் விடுபட்டுள்ளமையுடன் நான்கு பேர் பளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ–07)

## ஷானி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்துள்ளார்.

இலங்கையின் மிக அனுபவம் மிக்க – முன்னணி குற்றங்கள் தொடர்பிலான மர்மங்களைத் துலக்கிய–குற்றப் புலனாய்வாளராகவும், சி.ஐ.டி. எனப்படும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும் இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஷானி அபேசேகர கடந்த நவம்பர் மாதம் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, தெற்கு பிரதிப்பொலிஸ் மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளராக நியமிக்கப்பட்டார்.

இந்த இடமாற்றத்தை ஆட்சேபித்தே ஷானி அபேசேகர உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

## ரி.ஐ.டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கெருடாவில் தெற்கை சேர்ந்த பரமு விஜயகுமார் (வயது –38) என்பவரே காணாமல் போயுள்ளார் என நேற்று முன்தினம் வியாழக்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தனதுகணவரைப்பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கடந்த 06ஆம் திகதி விசாரணைக்கு அழைத்திருந்தனர். அதற்காக அவர் கொழும்புக்குச் சென்று இருந்தார். அன்றைய தினத்தில் இருந்து அவருடனான தொடர்பு கிடைக்கவில்லை என முறைப்பாட்டில் மனைவி தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் கொழும்பு பயங்கரவாதவிசாரணைப் பிரிவினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, சம்பந்தப்பட்ட நபர் விசாரணைக்கு அன்றைய தினம் சமுகமளிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ–07)

## பொதுத் தேர்தலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அலுவலகத்தில் நேற்று மதியம் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை உயர்த்தி, வறுமையை இல்லாதொழிக்க, வாழ்வாதரங்களை உயர்த்த கிராமிய மட்டத்தில் செயற்திட்டங்களை முன்னெடுக்க உள்ளோம்.

கம்பெரலிய வேலை திட்டத்தில் பல பிரச்சினைகள் இருந்தன. அதில் பாகுபாடுகள் காட்டப்பட்டன எனக் குறைபாடுகள் கூறப்பட்டன. ஆனால் இந்த வேலைத் திட்டங்களில் அந்த பாகுபாடுகள் இருக்கப் போவதில்லை.

புதிய வேலைத்திட்டங்கள் குறைபாடுகள் அற்ற வேலை திட்டங்களாக முன்னெடுக்கவுள்ளோம். அதிகாரிகள் முன் மொழிந்த வேலைத்திட்டங்களையே முன்னெடுப்போம். அதனூடாக மக்களுக்குத் தேவையான வேலைத் திட்டங்களையே மேற்கொள்வோம்.

எதிர்வரும் திங்கட்கிழமை இந்த வருடத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் எவை, வெற்றிகரமாக முடிக்கப்பட்டவை எவை, இடைநிறுத்தப்பட்ட வேலை திட்டங்கள் எவை, செயற்படுத்த முடியாத வேலைத் திட்டங்கள் எவைஎன்பன தொடர்பில் ஆராயும் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளோம்.

அதேவேளை, எமது மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிரித்துச் செல்கின்றது. இலங்கையில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்த மாவட்டங்களில் யாழ். மாவட்டம் இரண்டாம் இடத்தில் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே டெங்கு நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உள்ளூராட்சிச் சபைகள் மற்றும் பிரதேச செயலகங்கள் ரீதியில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அது தொடர்பிலான மீளாய்வுக் கூட்டத்தை எதிர்வரும் திங்கட்கிழமை நடத்தவுள்ளோம். அதனூடாக அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குத்தேவையானவளங்களைப் பெற்றுகொள்வது தொடர்பிலும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடவுள்ளோம்.

சட்டத்துக்குப்புறம்பானமணல் அகழ்வு தொடர்பிலும் நடவடிக்கைகளைமுன்னெடுக்கஉள்ளோம். இது தொடர்பில் மூத்த பொலிஸ் அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாருடன் இணைந்து ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெறும் இடங்களை அடையாளம் கண்டுள்ளோம்.

அத்துடன் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபடும் சந்தேகநபர்களின் விவரம் , சந்தேகத்துக்கு இடமான டிப்பர் வாகன இலக்கங்கள் என்பவற்றைப் பொலிஸாருக்கு வழங்கியுள்ளோம்.

அவர்கள் இதனைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளனர். இது தொடர்பிலும் மீளாய்வுக் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளோம்.

இந்தியாவில் உள்ளவர்கள் போர் காரணமாக இங்கிருந்து சென்றவர்கள். அவர்கள் மீள நாடு திரும்பவேண்டும். அவர்கள் மட்டுமல்லர், வேறு நாடுகளிலும் உள்ளவர்களும் நாடு திரும்ப வேண்டும் என்பதே எமது விருப்பம். அவ்வாறு நாடு திரும்புபவர்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளைச் செய்து கொடுப்போம்.

அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் பிரதமருடன் பேசியுள்ளோம். அனைவரும் விடுவிக்கப்படவேண்டும். அதற்குக் கொள்கை ரீதியில் முடிவுகள் எடுக்கப்படவேண்டும். அதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அதற்கான கால அவகாசம் சற்றுக் கூடுதலாக வேண்டும் என்பதனால் அது நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரே சாத்தியமாகும் என நம்புகின்றேன் – என்றார். (ஐ–07)

## ரஜிதவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ராஜித சேனாரத்ன கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முன் பிணை கோரும் மனுத்தள்ளுபடி செய்யப்பட்டது.

நவம்பர் 10 ஆம் திகதி, ராஜித சேனாரத்ன ஒழுங்கு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்பாக இரண்டு பேர் தகவல்களை வெளியிட்டிருந்தனர்.

அந்த விவகாரம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும், குற்றவிசாரணைத்திணைக்களம், ராஜித சேனாரத்னவின் செய்தியாளர் சந்திப்பில் வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்பாகத் தகவல்களை வெளியிட்ட இருவரையும் கைது செய்துள்ளது.

அத்துடன் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவையும் கைது செய்வதற்கான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தநிலையிலேயே தம்மைக் கைது செய்வதற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிடுமாறு கோரி, கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் ராஜித சேனாரத்ன முன் பிணை மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்தமனு நேற்று விராணைக்கு எடுக்கப்பட்ட நிலையில் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றால் அது தள்ளுபடி செய்யப்பட்டது.

சட்டத்தின் பிடியில் சம்பிக்க ரணவக்க அகப்பட்டுள்ளார் என்றும், விரைவில் ராஜித சேனாரத்னவும் அகப்படுவார் என்றும் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிறைக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், ஆசு மாரசிங்க, சிட்னி ஜயரத்ன உள்ளிட்டோர் ரணில் விக்கிரமசிங்கவுடன் வெலிகடை சிறைச்சாலையில் உள்ள விளக்கமறியல் சிறைக்கு விஜயம் செய்தனர்.

சம்பிக்க ரணவக்கவைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க –

சம்பிக்க ரணவக்கவை சந்தித்து நாங்கள் கலந்துரையாடினோம். சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக எந்த குற்றச்சாட்டும் இல்லை என நீதிமன்றம் அறிவித்திருந்தது. இதன் பின்னர் நாடாளுமன்ற சம்பிரதாயத்தை மீறி அவரைக் கைது செய்தனர்.

கைது செய்த பின்னரே சபாநாயகருக்கு அறிவித்தனர். கட்சித் தலைவர்கள் இது குறித்து சபாநாயகருடன் பேச்சு நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

சம்பிக்க ரணவக்கவை இரவில் கைது செய்தவதற்கான காரணங்கள் எதுவுமில்லை. பிரச்சினை இருந்தால், அவரைக் காலையில் வருமாறு அழைத்திருக்கலாம். இவற்றை பெரிய பிரச்சினையாக நாங்கள் பார்க்கின்றோம். – என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ளன. இவற்றுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்ய முற்பட்ட சந்தேகநபர் நஞ்சருந்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் உடனடியாகத் தெல்லிப்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பலாலி விமானப் படைத்தளத்தில் பணியாற்றும் அலுவலகர் ஒருவர் தனது குடும்பத்தை அழைத்து யாழ்ப்பாணம் வந்திருந்த நிலையில் அவர் அவர்களை யாழ். நகரில் பயணம் அனுப்புவதற்காக நேற்று அதிகாலை 4 மணிக்கு ஓட்டோவில் அழைத்து வந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் பலாலி வீதியில் அவர்கள் பயணித்த ஓட்டோவை மோட்டார் சைக்களில் வந்த மூவர் வழிமறித்துள்ளனர். மறைத்திருந்த அந்த மூவரும் முகத்தை மூடிக் கட்டிக்கொண்டு வாளைக் காண்பித்து கொள்ளையடித்துள்ளனர்.

4 அரைப் பவுண் நகைகள் மற்றும் 10 ஆயிரம் ரூபா பணம் என்பன கொள்ளையிடப்பட்டன என விமானப் படை அலுவலர் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

அத்துடன் உரும்பிராய் பகுதியில் பயணித்த ஒருவரிடம் ஓட்டோவில் வந்தவர்கள் கொள்ளையடித்துள்ளனர். அவரிடம் அலைபேசி, கைக்கடிகாரம் மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டன என முறைப்பாடு கிடைக்கப் பெற்றது.

கோப்பாய் பொலிஸ் பிரிவிலும் நேற்று அதிகாலை மற்றொரு வழிப்பறிக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வடக்கு மாகாணப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் கதிர்வேல் செவ்வேளிடம் இந்த வழிப்பறிக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றதாக அவரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கோப்பாயில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வீதியில் பயணித்த அவரிடம் மூன்று பேர் கொண்ட கும்பல் இடைமறித்து பணம் மற்றும் அலைபேசியைப் பறித்தெடுத்துச் சென்றதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரும்பிராய் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் முறைப்பாட்டாளர் வழங்கிய அடையாளத்தின் அடிப்படையில் சந்தேகநபர் ஒருவரைத் தேடி உரும்பிராய் தோட்டப்பகுதிக்கு தேடிச் சென்றபோது, சந்தேகநபர் தோட்டத்திலிருத்த ரவுண்டப் என்ற கிருமி நாசினியை அருந்தி அவர் உயிர்மாய்ப்புக்கு முயன்றார்.

அவர் உடனடியாக தெல்லிப்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சந்தேகநபர் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் சிறைச்சாலை அதிகாரிகளின் பிடியிலிருந்து தப்பித்தவர்.

மூன்று கொள்ளைச் சம்பவங்களையும் ஒரே கும்பலே செய்திருக்க முடியும் எனச் சந்தேகிக்கப்படும் நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ–07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## புறக்கணிக்க முடியாத சர்வதேசக் கடப்பாடு

'இலங்கைத் தமிழர்களுடைய உரிமைகளுக்கான – நீதி, நியாயத்துக்கான – கௌரவ வாழ்வுக்கான – எழுபது ஆண்டு காலப் போராட்டம் வெறும் அபத்தம். அர்த்தமில்லாதது' – என்பதுதான் இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் ஒரே தீர்மானம்.

தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை அடக்கி, ஒடுக்கி, அழித்த வெற்றி மமதையில் நின்றாவாறு –

அதையொட்டித் தாமும் தமது தரப்பும் கிளப்பிய பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாண்மைத் திமிரின் மூலம் கிடைத்த தேர்தல் வெற்றியின் உச்சியில் நின்றபடி –

தமிழரின் எழுபது ஆண்டு காலப் போராட்டங்கள் அர்த்த மற்றவை என்ற தொனிப்பட ஏளனத்துடனும் எகத்தாளத்து டனும் அவர் இதனை உரைத்து நிற்கின்றார்.

இந்த எகத்தாளப் பேச்சின் அடுத்த கட்டமாக, *"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர் பாக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் நாட்டுக்கு ஆபத்தான வையாக அமையும் என்பதால் அவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது"* – என்றும் ஒரு தலைப்பட்சமாக அறிவித்திருக்கின் றார் அவர்.

சர்வதேச மட்டத்தில் பல நாடுகளின் பங்காளிப்புடன் முன் னெடுக்கப்படும் இத்தகைய தீர்மானங்கள் தொடர்பில் சம்பந் தப்பட்ட நாட்டுக்கு இருக்கும் கடப்பாடுகள், பொறுப்புகள், கட்டா யங்கள் குறித்து அவர் புரிந்து கொள்ளாமல் பேசுகின்றார் என்றே தோன்றுகின்றது.

தமிழர் ஆயுத பலத்தில் உச்சமாக நின்று, நாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையங்களையே தகர்த்து, நாட்டைக் குலைநடுங்க வைத்தபோது, ஓடிப் போய் சர்வதேச பங்களிப்பு டன் ஒஸ்லோவில் வைத்து சுயநிர்ணய உரிமை அடிப்படையி லான தீர்வுக்கு இணங்குவதாக அறிவிப்பதும் –

பின்னர் தமிழர் தரப்பை ஆயுத பலத்தால் வீழ்த்தியதும், அப் படித் தீர்வு எதுவும் கிடையாது என பிரகடனப்படுத்துவதும் –

நாட்டுக்குள் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு 'கயிறு விடும்' வேலைக்கு உதவக் கூடும்.

ஆனால் இந்த முன் பின் முரண்டு நிற்கும்பாணி, சர்வதேச விடயங்களைக் கையாளும் விவகாரத்தில் சரிப்பட்டே வராது என்பதை கோட்டாபய ராஜபக்ஷ அணி முதலில் நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

ஒன்றல்ல, இரண்டல்ல, ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸி லில் இலங்கை தொடர்பாக ஒரே விடயத்தை வலியுறுத்தி மூன்று தீர்மானங்கள் அடுக்கடுக்காக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

அதுவும், பிற நாடுகளினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் கள் மட்டும் அல்ல அவை. இலங்கையும் சேர்ந்து அனுசரணைப் பணி வகுத்து முன்மொழிந்து கொண்டு வந்த தீர்மானங்கள்.

அதுவும் முதலாவது தீர்மானத்தில் கூறப்பட்ட விடயங்களை நிறைவு செய்வதற்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப் பட்ட நிலையில், அவை நிறைவேற்றப்படாமல் மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்குமாறு இலங்கை கேட்டுக் கொண் டதன் பின்னர் அதற்கு இடமளித்து இரண்டாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங் கப்பட்டது.

அதிலும், விடயங்கள் ஒப்பேறாத நிலையில் திரும்பவும் இலங்கையின் கோரிக்கையின் பேரில் மேலும் இரண்டு வரு டங்கள் கால அவகாசம் வழங்கும் தீர்மானம் – அதுவும் கூட இலங்கையின் அனுசரணையுடன் கொண்டு வரப்பட்டு – நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு தானே முன்னின்று அனுசரணைப் பணி வகித்து ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்துவிட்டு, அதை நிறைவு செய்வதற்கு மேலும் மேலும் கால அவகாசம் வேண்டும் என்று இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை புதிய தீர்மானங்களை ஏற்படுத்தி, ஆறு ஆண்டுகளுக்குக் கால அவகாசத்தைப் பெற்று, காலத்தை இழுத்தடித்து விட்டு, இப்போது அந்தத் தீர்மானங்களில் கூறப்பட்டவை இலங்கைக்குப் பாதிப்பானவை என்று வெகு 'சிம்பிளாகக்' கூறிவிட்டு, அதிலிருந்து நழுவி வெளியேறி விடலாம் என இலங்கை கருதுகின்றது போலும்.

அது, அப்படி இலகுவான காரியமாக இருக்கப் போவ தில்லை என்பது திண்ணம்.

பெரும்பாலும் இந்த விடயம் ஐ.நா.மனித உரிமைகள் கவுன் ஸிலின் அடுத்த பெப்ரவரி – மார்ச் அமர்வில் எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ தரப்பினரின் திட்டப்படி, மார்ச் முற் பகு தியில் இலங்கையில் தற்போதைய நாடாளுமன்றம் கலைக்கப் படும் வேளையில்தான் – ஜெனீவா அமர்வில் இலங்கை விட யமும் எடுக்கப்படவிருக்கின்றது.


ஜெனீவாவில் இம்முறை இலங்கை விவகாரம் கையாளப் படும் போது கொழும்பில் பெரும்பாலும் மஹிந்த ராஜபக்ஷவின் காபந்து அரசே பதவியில் இருக்கும்.

பொதுத் தேர்தல் முடிந்து நிலையான அரசு வந்த பின்னர் ஜெனீவா விடயத்தைப் பார்த்துக் கொள்ளலாம் என்று இம்முறை மாநாட்டில் கூறி காலத்தை எடுத்துக் கொள்ள கோட்டாபய அரசு முயற்சிக்கும் என்றே எதிர்பார்க்கலாம்.

எப்படிக் காலத்தை எடுத்தாலும், எதைச் சொல்லி விடயங் களை மூடி மறைத்தாலும், என்றோ ஒருநாள் 'பொறுப்புக் கூறல்' என்ற விலங்குக்குக் கட்டுப்பட்டு ராஜபக்ஷக்கள் அடங்குவது தவிர்க்க முடியாத கட்டாயமாக இருக்கும் என்பது உறுதி.

# நல்லூர்ப் பிரதேச சபையின் திண்மக் கழிவு தரம் பிரிக்கும் நிலையத்தை இடமாற்றுக!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 21

நல்லூர் பிரதேச சபையின் திண்மக் கழிவு தரம் பிரிக்கும் நிலையத்தினால் அருகில் வாழும் மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதுடன், சுகாதார சீர்கேடுகளையும் எதிர் கொண்டுள்ளனர் என நல்லூர்ப் பிரதேச சபை யின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் சி. கௌசல்யா தெரிவித்துள்ளார்.

நல்லூர்ப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கோண்டாவில் – காரைக்கால் பகுதி யில் அமைக்கப்படுள்ள இந்த நிலையத்தினால் அப்பகுதி மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு உறுப்பினர் சி.கௌசல்யா கருத்து தெரிவிக்கும்போதே இதனைத் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

காரைக்கால் பகுதி ஒரு புனிதமான பகுதி யாகும். அங்கு பழமை வாய்ந்த சிவாலயம் உண்டு. சித்தர்கள் வாழ்ந்தமைக்கான சான்று களும் உண்டு. அந்த ஆலயத்துக்கு அருகில் நல்லூர்ப் பிரதேச சபையின் திண்மக் கழிவு களை தரம் பிரிக்கும் நிலையம் அமைந்துள் ளது.

அங்கு கொண்டு வரப்படும் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு, கழிவுகள் கொட்டப்படும் இடங்க ளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. தற்போது அதிகளவான கழிவுகள் அங்கு கொண்டுவரப் படுவதனால் தரம் பிரிப்பதில் ஊழியர்கள் சிர மங்களை எதிர்கொண்டு உள்ளனர்.

இதனால் ஒரு நாளைக்கு 6 – 8 உழவு இயந் திரங்களில் கழிவுகள் கொண்டு வரப்பட்டால் , அவை தரம் பிரிக்கப்பட்டு 3 – 4 உழவு இயந் திரக் கழிவுகளே மீள கொண்டு செல்லப்படுகின் றன. ஏனையவை அங்கேயே தேக்கப்படு கின்றன.

இதனால் அங்கு கழிவுகள் அதிகமாக காணப் படுவதனால் அருகில் உள்ள குடியிருப்பாளர்கள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த காலங்களில் உக்கக் கூடிய கழிவு களை தரம் பிரித்து பசளையாக்கும் செயற்பாடு கள் முன்னெடுக்கப்பட்டன. தற்போது நிலையத் துக்கு கொண்டு வரப்படும் கழிவுகள் அதிகரித் துள்ளமையால் , பசளையாக்கும் செயற்பாடு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தை மக்கள் குடியிருப்புப் பகுதியில் இருந்து நீக்கி வேறொரு இடத்தில் நிறுவுமாறு கடந்த இரண்டு வருட காலமாக சபை அமர்வுகளில் குரல் கொடுத்து வருகின் றேன். ஆனால் எனது குரலுக்குச் சபை மதிப்ப ளிக்கவில்லை.

இம்முறை பட்ஜெட் திண்ம கழிவகற்றலுக்கு என ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் திண்மக் கழிவு தரம் பிரிக்கும் நிலையத்தை பிறிதொரு இடத்தில் அமைக்க காணி கொள் வனவு செய்ய நிதி ஒதுக்கவேண்டும் என கோரினேன். அதனையும் சபை கவனத்தில் எடுக்க வில்லை.

தற்போது திண்மக் கழிவு தரம் பிரிக்கும் நிலையம் அமைந்துள்ள பகுதி பிறிதொரு இடத் துக்கு மாற்றப்பட்டு அப்பகுதி மக்களின் சுகாதா ரத்தைப் பேண நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிடின் அப்பகுதி மக்களை ஒன்று திரட்டி சபைக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய சூழல் ஏற்படும் – என்றார்.(ஐ – 07)

# சம்பிக்க ரணவக்க கைது பழிவாங்கல் அல்லவாம்!



கொழும்பு, டிசெ. 21

முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்டுள்ளமையில் எந்த அரசியலும் இல்லை என்றும், பொலிஸ் அதிகாரிகளுக்குக் கிடைத்த ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டே அவருக்கு எதிரான சட்ட நடவடிக்கை கள் எடுக்கப்படுகின்றன என அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அமைச்சரவை முடிவு களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் எழுப் பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர் –

முந்தைய நல்லாட்சி அரசு பெரும்பாலும் எல்லா அனைத்து கட்சிகளின் அரசியல்வாதி கள், பௌத்த பிக்குகள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பலரை, அரசியல் பழிவாங்கும் நோக்கில் துன்புறுத்தியது.

ஆனால் ராஜபக்ஷ அரசு ஒருபோதும் அந்த மாதிரியான தந்திரங்களைக் கையாளாது.

முன்னாள் அமைச்சர் ரணவக்கவைக் கைது செய்து தடுத்து வைத்திருப்பது முற்றிலும் சட்டபூர் வமான செயற்பாடாகும்.

எனது தொகுதியில் ஒரு இளைஞர் 2016 இல் அமைச்சர் ரணவக்க சம்பந்தப்பட்ட வீதி விபத்தில் பலத்த காயமடைந்தார்.

பாதிக்கப்பட்டவருக்கு அப்போது நீதி வழங்கப் படவில்லை என்றாலும், பொலிஸ் அதிகாரிகள் அதை இப்போது சரி செய்ய முயற்சிக்கின்றனர்.

விபத்துக்குப் பிறகு பாதிக்கப்பட்டவரின் குடும் பத்தினர் மிகவும் பயந்து விட்டார்கள், அதனால் தங்களைப் பார்க்க வேண்டாம் என்று குடும்பத் தினர் என்னிடம் கேட்டுக்கொண்டனர் என்று கூறினார். (ஐ)

**நாளை 22.12.2019 – ஞாயிற்றுக்கிழமை**

திதி : ஏகாதசி பி.ப 3.54 வரை
நட்சத்திரம்: சுவாதி சித்தம் மு.இ 7.28 வரை
இராகுகாலம் : 4.55 – 6.25
சுப நேரம் : 9.25 – 10.55

# அம்பாந்தோட்டை உடன்பாடு மாற்றியமைக்கப்படமாட்டாது

## ஜனாதிபதி கோட்டா கூறினார்




கொழும்பு, டிசெ. 21

அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாட்டை மாற்றியமைக்க தாம் விரும்பவில்லை என்றும், ஆனால், துறைமுகத்தின் பாதுகாப்பு கட்டமைப்பை மாற்ற வேண்டியிருக்கலாம் என்றும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் வெளிநாட்டுச் செய்தியாளர்களுடன் நேற்று முன் தினம் நடத்திய சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான 99 ஆண்டு குத்தகை உடன்பாட்டை மாற்ற விரும்புகிறீர்களா என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி –

அதை மாற்ற முயற்சிக்கவில்லை, ஏனெனில் இது முன்னைய அரசு செய்து கொண்ட வணிக உடன்பாடு.

முன்னைய அரசு இந்த உடன்பாடு குறித்து பேச்சு நடத்தியபோது, பொதுஜன பெரமுன கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

இது மீள் பேச்சு அல்ல, இது ஒரு வணிக உடன்பாடு என்பதால், அதன் வணிக அம்சங்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை.

பாதுகாப்பு குறைபாடுகள் குறித்து நான் கவலைப்படுகிறேன், அது குறித்தே நாங்கள் அவர்களுடன் பேசவுள்ளோம்.

துறைமுகத்தின் கட்டுப்பாட்டுப் பொறிமுறை குறித்து ஆராய்கிறோம். ஏனைய துறைமுகங்களைப் போலவே, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் கட்டுப்பாட்டையும் அரசே வைத்திருக்கவேண்டும்.

குறிப்பாக எல்லைக் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு, ஆகிய விடயங்கள், அரசிடம் இருக்கவேண்டும்.

கொழும்பு துறைமுகத்தைப் போல, எந்தக் கப்பல்கள் வரும் அல்லது செல்லவேண்டும் என்பதை அரசே தீர்மானிக்க வேண்டும். அந்த அதிகாரம் எங்களிடம் இருக்க வேண்டும்.

சீனப் பிரதிநிதிகளுடன் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து விவாதித்தேன். துறைமுகத்தின் பாதுகாப்பு, அரசிடம் வழங்கப்படவேண்டும் என்பதற்கு அவர்கள் உடன்பட்டுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்திற்கு ஒரு கப்பல் வரும் போது, பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் உள்ளன. இதே நடைமுறை, காங்கேசன்துறை, திருகோணமலை அல் லது அம்பாந்தோட்டையிலும் பின்பற்றப்படவேண்டும்.

நான் பதவியேற்ற பின்னர், என்னைச் சந்தித்த சீன சிறப்பு பிரதிநிதியுடன் இந்த விடயம் பற்றி கலந்துரையாடினேன்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பு மற்றும் துறைமுகக் கட்டுப்பாடு தொடர்பான விடயங்களில் திருத்தம் செய்வதற்கு அவர் இணங்கினார்.

ஓர் அரசுடன் கையெழுத்திடப்பட்ட வணிக உடன்பாடுகள், அடுத்த அரசால் மதிக்கப்படுவதில்லை, அதனை மாற்றி விடும் என்ற எண்ணத்தை முதலீட்டாளர்களிடம் ஏற்படுவதுவதற்கு நான் விரும்பவில்லை. அது பிரச்சினையல்ல.

துறைமுகத்தை ஒரு முக்கிய மூலோபாயப் பொருளாதார மையமாகும். இது ஓர் இறையாண்மை கொண்ட அரசின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டிய ஒரு சொத்து.

உலகளாவிய அதிகாரப் போட்டிகளின் ஒரு பகுதியாக மாற நாங்கள் விரும்பவில்லை.

உடன்பாடுகளை ஆய்வு செய்ய ஒரு குழுவை நியமித்துள்ளோம். அதன் கண்டறிவுகளின் அடிப்படையில், துறைமுகத்தின் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு பொறிமுறையை மறுசீரமைக்க முயலக்கூடும் என்று தெரிவித்தார். (ஐ)

# பிரசவத்தில் சிசு மரணம்; தாதிக்கு நீதிமன்று பிணை

மட்டக்களப்பு, டிசெ. 21

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிசு ஒன்று உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட தாதியை, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதபதி ஏ.சி றிஸ்வான் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு பேர் கொண்ட சரீரப் பிணையில் விடுவித்துள்ளார்.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள திராய்மடு பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பிணித்தாயொருவர் தனது முதலாவது பிரசவத்துக்காகக் கடந்த செப்ரெம்பர் 28 ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒக்ரோபர் 2 ஆம் திகதி சுகப் பிரசவத்தில் பிரசவித்த சிசு இறந்துள்ளது.

இந்த சிசு இறந்து பிறக்கவில்லை எனச் சிசுவின் தாய், தந்தை, உறவினர்கள் கூறினர். தமது குழந்தை இறந்ததற்குக் காரணம் வைத்தியர் மற்றும் தாதியர் எனக் குற்றம் சுமத்தி வைத்தியசாலைக்குள் இறந்த சிசுவுடன் அவர்கள் நீதி கோரிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டதையடுத்து இறந்த சிசுவை பொலநறுவை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார் .

இந்தச் சம்பவம் தொடர்பாக பிரசவ அறையின் பெண் தாதியர் ஒருவரைக் கடந்த செவ்வாய்க்கிழமை பொலஸார் கைது செய்து மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதபதி ஏ.சி றிஸ்வான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது அவரை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு பேர் கொண்ட சரீரப் பிணையில் விடுவித்து எதிர்வரும் ஜனவரி 29 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டார்

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்களான வைத்தியர் ஒருவர் மற்றும் இரு தாதியர்களையும் ஜனவரி 29 ம் திகதி நீதிமன்றில் அஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# கொழும்பு சீரடி சாயி மந்திரில் புனித வேப்ப மரக்கன்று நடுகை

வடஇந்தியாவிலுள்ள சீரடி சாயி சமஸ்தானத்தின் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற புனித வேப்பமரத்தின் கன்று, கொழும்பு புதுச்செட்டித்தெருவிலுள்ள சீரடி சாயி மந்திரில் கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை போயாதினம், நிலையத்தின் தலைவர் உதயநாயகம் தலைமையில் சீரடிசாயி பகத்ரும், தோட்ட உட்கட்டமைப்பு, சமூக வலுவூட்டல் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் பிரதிட்சை செய்துவைத்தார்.

அந்த வைபவத்தில் அமைச்சர் கௌரவிக்கப்பட்டு, சாயிநிலையத்தின் சார்பாக நினைவுச்சின்னமொன்று அவருக்குக் கையளிக்கப்பட்டது

இங்கிலாந்திலுள்ள கின்னஸ் ஸ்தாபனம், உலக சாதனை பட்டியலில் உலகிலுள்ள கோவில்களில் சக்திவாய்ந்த கோவிலாகவும், பக்தர்களின் எண்ணிக்கை அதிகம் கொண்ட வணக்கஸ்தலமாகவும் சீரடி சமஸ்தானத்தைக் கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி பிரகடனம் செய்துள்ளது. இதற்கான சான்றிதழை சீரடியிலுள்ள சீரடி சமஸ்தானத்துக்கு, லண்டன் நாடாளுமன்ற உறுப்பினர் சகிதம் அந்த ஸ்தாபனத்தின் உறுப்பினர்கள் கையளித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.





# ஒற்றையாட்சித் தீர்வு எதற்கும் பயன்படாது

## அடித்துச் சொல்கிறார் கஜேந்திரன்




யாழ்ப்பாணம், டிசெ. 21

பௌத்த சிங்கள பேரினவாதத்தால் தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படுகின்றமைக்கு, ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வினால் முற்றுப்புள்ளி வைக்க முடியாது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ. கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆற்றிய உரையில், தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படுகின்றமையை ஏற்க முடியாது. தமிழர்கள் சமத்துவமாக வாழக்கூடிய அரசியல் தீர்வு வேண்டுமென கூறியிருந்தார். அவர் கூறியுள்ள அனைத்து விடயங்களும் 13ஆம் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே அமைந்திருந்தன.

பௌத்த சிங்கள பேரினவாதத்தால் தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படுகின்றமைக்கு முற்றுப்புள்ளி வைக்க எங்களைப் பொறுத்தவரை ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்தவொரு தீர்வினாலும் முடியாது – என்றார். (ஐ)

# சுவிஸ் உயர் அதிகாரி கொழும்பு வருகிறார்

கொழும்பு, டிசெ. 21

சுவிட்சர்லாந்து தூதரகப் பெண் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்காக சுவிஸ் வெளிவிவகார திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் இலங்கை வரவுள்ளார்.

இலங்கைக்கான முன்னாள் சுவிஸ் தூதுவரான ஜோர்ஜ் ப்ரீடன் அதற்காக இலங்கை வரவுள்ளார் என சுவிஸ் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு அனுபவமிக்க ராஜதந்திரியின் தலைமையின் கீழ் கொழும்பு சுவிற்சர்லாந்து தூதரகத்தின் பாதுகாப்புச்சம்பவம் தொடர்பில் தெளிவுபடுத்தும் சந்தர்ப்பத்தை ஆராய முடியும் என அறிக்கை ஒன்றில் சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# சுவிஸ் தூதரகப் பணியாளரின் கைபேசியை கோரும் நீதிமன்று

கொழும்பு, டிசெ. 21

இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு, துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர், விடுவிக்கப்பட்டார் எனக் கூறப்படும் சுவிஸ் தூதரகஉள்ளூர் பணியாளரான கானியா பெனிஸ்டர் பிரான்ஸிஸ் மற்றும் அவரது கணவர் ஆகியோரின் அலைபேசிகள் மற்றும் சிம் அட்டைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் உத்தரவிடப்பட்டுள்ளது.

சுவிஸ் தூதரகத்துக்கே இந்த உத்தரவை நேற்றுமுன்தினம் அவர் பிறப்பித்துள்ளார். (ஐ)

# தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்குமாறு கோரிக்கை

## பிரதமர் மோடியிடம் தமிழக முதல்வர் நேரில் வேண்டுகோள்



புதுடெல்லி,டிசெ.21

தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கை தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மோடியிடம் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்தநாள் கொண்டாட்டம் குறித்த மாநாடு டெல்லியில் நடைபெற்றது. இதில் கலந்து கொள்ள டெல்லி சென்ற முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமிக்கு, தலைநகரில் உள்ள விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதையடுத்து டெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்துக்கு சென்ற முதலமைச்சருக்கு அமைச்சர் ஜெயக்குமார் உள்ளிட்டோர் வரவேற்பு அளித்தனர். இதையடுத்து பாதுகாப்புப் படை வீரர்கள் அளித்த மரியாதையை முதலமைச்சர் ஏற்றுக் கொண்டார்.

இதன் பின்னர் குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, தமிழகத்தில் சட்டம், ஒழுங்கும் முறையாகப் பேணப்படுகிறது என்றார்.

இந்தியாவில் வாழ்கின்ற இந்தியர்களுக்கு இந்தக் குடியுரிமை சட்டத் திருத்தத்தினால் எவ்வித பாதிப்பும் கிடையாது என்று அவர் கூறினார். இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வந்துள்ள இலங்கைவாழ்தமிழர்களுக்கு இரட்டைக்குடியுரிமை வழங்க வேண்டுமென்று பிரதமரிடம் தாம் வலியுறுத்தி உள்ளார் என அவர் தெரிவித்தார்.

உள்ளாட்சித் துறை சார்பாக 13 விருதுகளை தமிழ்நாடு அரசு பெற்றுள்ளதாக கூறிய முதலமைச்சர், தமிழகத்தில் அனைத்து துறைகளும் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன என்றார். இதன் பின்னர் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவையும் அவர் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

# டெல்லியில் கடும் பனிமூட்டம் விமான சேவைகளும் பாதிப்பு!



டெல்லியில் கடும் குளிருடன் பனிக் காற்று வீசி வரும் சூழலில், பனிமூட்டம் காரணமாக விமான சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

நடப்பு பருவத்தில் முதல் முறையாக நேற்றுமுன்தினம் குறைந்தபட்ச வெப்பநிலை 5.2 டிகிரி செல்ஸியசாகப் பதிவானது.

அதிக பட்சமாக 15 டிகிரி செல்சியஸ் மட்டுமே அங்கு பதிவானது.

இந்நிலையில் நேற்றுக் குறைந்தபட்ச வெப்பநிலை 8 டிகிரி செல்ஸியசாகவும், அதிகபட்ச வெப்பநிலை 19 டிகிரி செல்ஸியசாகவும் பதிவாகியுள்ளது.

ஆனாலும் நகரைச் சூழ்ந்துள்ள அடர் பனிமூட்டத்தால் சில விமானங்கள் தாமதாகியுள்ளன.மோசமானவானிலை காரணமாக விமான இயக்கங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என டெல்லி விமான நிலையம் சார்பில் ட்விட்டரில் அறிவிக்கப்பட்டுள்ளது. பயணிகள் தங்கள் பயணவிமானங்களின் சேவை நிலைவரங்களைத் தொடர்ந்து சரிபார்த்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# இந்தியாவில் குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராக பல இடங்களிலும் போராட்டங்கள், வன்முறைகள்

## பொலிஸார் தடியடி, கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு, துப்பாக்கிச்சூடு



மங்களூரு,டிசெ.21

குடியுரிமை திருத்த சட்டத்துக்கு எதிரான போராட்டத்தில் வன்முறை வெடித்ததால் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதில் மங்களூருவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 2 பேரும், லக்னோவில் ஒருவரும் குண்டு பாய்ந்து இறந்தனர்.

உத்தரபிரதேச மாநிலத்தில் குடியுரிமை திருத்த சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பல இடங்களில் வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றன. சாம்பல் மாவட்டம் சவுத்ரி சாராய் பகுதியில் ஓர் அரசு பஸ்ஸுக்குப் போராட்டக்காரர்கள் தீவைத்தனர். மாநிலம் முழுவதும் 144 தடை உத்தரவு போடப்பட்டுள்ளது. சாம்பால் மாவட்டத்தில் இணையதள இணைப்புத் துண்டிக்கப்பட்டது.

லக்னோவிலும் போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். அங்கு ஒரு பொலிஸ் நிலையதுக்கு வெளியே நின்றிருந்த வாகனங்கள் மீது கல்வீசித் தாக்கியும், கார் உள்ளிட்ட வாகனங்களுக்குத் தீவைத்தும் ஒரு கும்பல் ரகளையில் ஈடுபட்டது. மடேய்கஞ்ச் பகுதியில் நடந்த இந்த வன்முறையைக் கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர்புகைக் குண்டுகளை வீசினர்.

அப்போது போராட்டக்காரர்கள் பொலிஸார் மீது கல்வீச்சில் ஈடுபட்டனர். இதில் ஒரு பொலிஸ்காரர் படுகாயம் அடைந்தார். இதைத்தொடர்ந்து பொலிஸார் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதில் 3 பேர் குண்டு பாய்ந்து காயம் அடைந்தனர். அவர்கள் 3 பேரையும் பொலிஸார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். இதில் ஒருவர் சிகிச்சை பலனின்றி இறந்தார். அவரது பெயர் முகமது வாகில் என தெரியவந்தது.

அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் அமைதி பேரணி நடத்தினர். சட்டசபையில் சமாஜ்வாதிக் கட்சி மற்றும் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள், அமைதியான முறையிலும் போராட்டம் நடத்த அனுமதி மறுக்கப்படுவதைக் கண்டித்துக் கோஷங்கள் எழுப்பினார்கள். இதனால் அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்கள் சட்டசபை வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கர்நாடக மாநிலத்திலும் 144 தடை உத்தரவு போடப்பட்டுள்ளது. பெங்களூரு உள்படபல இடங்களில் தடையை மீறிப் போராட்டம் நடத்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் கைது செய்யப்பட்டனர்.

மங்களூருவில் போராட்டக்காரர்கள் பொலிஸார் மீது கல்வீச்சில் ஈடுபட்டனர். சாலையில் செல்லும் இருசக்கர வாகனங்களை அவர்கள் தடுத்து நிறுத்தித் தீவைத்தனர். அங்கு நிலைமையைத் தடியடி நடத்தியும் கட்டுப்படுத்த முடியாததால் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். அதன்பின்னர் கூட்டத்தினர் சிதறி ஓடினர். அப்போது 2 பேர் துப்பாக்கி குண்டு பாய்ந்து இறந்தமை தெரிந்தது. அவர்கள் ஜலீல் (வயது 49), நவ்சீன் (23) என அடையாளம் காணப்பட்டனர். போராட்டம் காரணமாக மங்களூருவில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பள்ளிகளுக்கும் விடுமுறை விடப்பட்டது.

பீகார் மாநிலத்தில் இடதுசாரி கட்சிகள் புதனன்று முழு அடைப்புப் போராட்டம் நடத்தின. இந்தப் போராட்டத்துக்கு சில சிறிய கட்சிகளும் ஆதரவு தெரிவித்தன. பாட்னா ராஜேந்திரா நகர் ரயில் நிலையத்தில் இடதுசாரி மாணவர் இயக்கத்தினர் தண்டவாளத்தில் அமர்ந்து ரெயில் மறியலில் ஈடுபட்டனர். இதனால் அங்கு சுமார் அரை மணி நேரம் ரெயில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. பின்னர் ரெயில்வே பாதுகாப்பு படையினர் அவர்களை விரட்டியடித்தனர்.

சிறிது நேரத்தில் முன்னாள் எம்.பி. பப்பு யாதவின் ஜன் அதிகார் கட்சியை சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் ராஜேந்திரா நகர் ரெயில் நிலையம் அருகே மறியலில் ஈடுபட்டனர். இதனால் மீண்டும் ரெயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அதன் அருகில் உள்ள சாலையில் டயர்களை எரித்தனர். அப்போது அந்த வழியாக சென்ற அம்புலன்ஸ் மற்றும் சில வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன. தர்பங்கா மாவட்டம் லஹாரியா சாராய் ரெயில் நிலையத்திலும் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. ஜெஹனாபாத்தில் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் தடையை மீறி போராட்டம் நடத்தியவர்களை பொலிஸார் தடியடி நடத்திக் கலைத்தனர். 20 பேர் கைது செய்யப்பட்டனர். சில நகரங்களில் முஸ்லிம் இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் பேரணி நடத்தினார்கள். முஸ்லிம் அமைப்பு ஒன்று முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்திருந்தது. இதனால் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் கடைகள் அடைக்கப்பட்டு இருந்தன. ஒரு கல்லூரி முன்பு போராட்டம் நடத்திய தேசிய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

அதேசமயம் மேற்குவங்காள மாநிலத்தில் வன்முறைச் சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. சட்டத்தை ஆதரிப்பவர்கள், எதிர்ப்பவர்கள் இடையே தெருக்களில் சிறிய தகராறுகள் நடந்தன எனப் புகார்கள் வந்தன. முதலமைச்சர் மம்தா பானர்ஜி கொல்கத்தா எஸ்பிளனேடு பகுதியில் பேரணி நடத்தினார். ராம்லீலா மைதானத்தில் இருந்து கம்யூனிஸ்ட் கட்சியினரும் பேரணி நடத்தினர்.

அசாம் மாநிலம் கௌகாத்தியிலும் இயல்புநிலை திரும்பியது. இதனால் அங்கு விதிக்கப்பட்டு இருந்த கட்டுப்பாடுகள் விலக்கப்பட்டன. திப்ருகாரில் கட்டுப்பாடுகள் 14 மணி நேரத்துக்கு விலக்கப்பட்டது.சம்பவம் வன்முறைச் சம்பவம் பற்றி எந்தப் புகாரும் இல்லை. வங்கிகள், அலுவலகங்கள், கடைகள் திறந்திருந்தன.

மேகாலயா மாநிலம் ஷில்லாங்கிலும் கட்டுப்பாடுகள் விலக்கப்பட்டன.

# நித்தியானந்தா இருப்பிடத்தை கண்டுபிடிப்பதில் சிக்கலாம்!



பெங்களூர்,டிசெ.21

சுவாமி நித்தியானந்தாவின் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பதில் பல்வேறு சட்ட சிக்கல்கள் உள்ளன எனவும், இதனால் அவரைக் கைது செய்ய முடியாமல் பொலிஸார் திணறி வருகின்றனர் எனவும் தகவல்கள் வெளியாகி உள்ளது.

சாமியார் நித்தியானந்தாவை கடத்தல் வழக்கில் குஜராத் பொலிஸாரும், பாலியல் வழக்கில் கர்நாடகா பொலிஸாரும் தேடி வருகிறார்கள்.

நித்தியானந்தா மீது சென்னை உள்பட பல்வேறு பொலிஸ் நிலையங்களில் புதுப்புது முறைப்பாடுகள் கூறப்பட்டு வருகின்றன. அடுத்தடுத்து வழக்குகள் பாய்ந்தமையால் நித்தியானந்தா வெளிநாட்டுக்குத் தப்பி ஓடினார்.

அவர் ஈக்குவடார் நாட்டில் ஒரு தீவை விலைக்கு வாங்கி 'கைலாசா' என்ற பெயரில் தனி நாடு அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியானது.

கைலாசா நாட்டில் குடியுரிமை கேட்டு 40 லட்சம் பேர் ஒன்லைன் மூலம் விண்ணப்பித்துள்ளனர் என நித்தியானந்தா வீடியோ வெளியிட்டார்.

அவர் புதிதாக வெளியிட்டுள்ள வீடியோவில் திராவிட நாத்திகத்தைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதற்கிடையே பாலியல் வழக்கில் நித்தியானந்தாவைக் கண்டு பிடிக்க பெங்களூர் பொலிஸாருக்கு கர்நாடகா உயர்நீதிமன்றம் கெடு விதித்திருந்தது. கடந்த 18 ஆம் திகதியுடன் கெடு முடிந்த நிலையில் நித்யானந்தாவைக் கண்டு பிடிக்க சி.பி.ஐ. மூலமாக இன்டர்போல் உதவியை நாடி இருப்பதாக கர்நாடகப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

ஆனால் நித்யானந்தா இருப்பிடத்தை கண்டு பிடிப்பதில் பல்வேறு சட்ட சிக்கல்கள் உள்ளன எனவும், இதனால் அவரைக் கைது செய்ய முடியாமல் பொலிஸார் திணறி வருகின்றனர் எனவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# லொறி மீது வான் மோதித் தீப்பிடித்ததில் 14 பேர் சாவு; 12 பேர் மோசமான காயம்

## மெக்ஸிக்கோவில் சுற்றுலாவுக்குச் சென்றவர்களுக்கு நேர்ந்த பரிதாபம்



மெக்ஸிக்கோ சிட்டி,டிசெ.21

மெக்ஸிக்கோவில் லொறி மீது வான் மோதித் தீப்பிடித்ததில் சுற்றுலாவுக்காக சென்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மெக்ஸிக்கோவின் மேற்கு பகுதியில் உள்ள ஜாலிஸ்கோ மாகாணத்தின் தலைநகர் குவாடலஜாராவில் உள்ள சான்பில்பே நகரை சேர்ந்த ஒரு குடும்பத்தினர் கிறிஸ்மஸ் விடுமுறையைக் கொண்டாட சுற்றுலா செல்ல முடிவு செய்தனர்.

அதன்படி அந்நாட்டின் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான புவேர்ட்டோ வல்லார்டா கடற்கரை நகரத்துக்கு செல்ல வானில் புறப்பட்டனர். அதில் 5 சிறுவர்கள் மற்றும் ஒரு பச்சிளம் குழந்தை உள்பட 26 பேர் இருந்தனர்.

இந்த வான் ஜாபோட்லேன்ஜோ நகருக்கு அருகே குவாடலஜாரா – லாகோஸ் டி மோரேனோ தேசிய நெடுஞ்சாலையில் அதிவேகத்தில் சென்று கொண்டிருந்தது.

அப்போது அது திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் தறிகெட்டு ஓடிய வான் சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த லொறி மீது பயங்கரமாக மோதியது.

மோதிய வேகத்தில் வான் தீப்பிடித்து எரிந்தது. இதையடுத்து, அந்த சாலையில் சென்ற வாகன ஓட்டிகள் உடனடியாக தீயணைப்பு துறையினருக்கு தகவல் கொடுத்தனர்.

ஆனால் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வருவதற்குள் வான் முற்றிலுமாக எரிந்து நாசமானது. இந்தக் கோர விபத்தில் 5 சிறுவர்கள் உள்பட 14 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர்.

மேலும் ஒரு பச்சிளம் குழந்தை உள்பட 12 பேர் பலத்த தீக்காயம் அடைந்தனர். அவர்களில் 2 பேர் கடுமையான தீக்காயங்களுடன் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்ததால் அவர்கள் இருவரும் ஹெலிக்கொப்டர் மூலம் குவாடலஜராவில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

மற்ற 10 பேரும் அம்புலன்ஸ் மூலம் அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றும் 12 பேரில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது.

விடுமுறையைக் கொண்டாட சுற்றுலாவுக்குச் சென்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த 14 பேர் விபத்தில் பலியான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# முஷரப்பின் உடலை மூன்று நாள்களுக்கு மத்திய சதுக்கத்தில் தொங்க விடுங்கள்!

## தேசத்துரோக வழக்குத் தீர்ப்பில் தெரிவிப்பு



இஸ்லாமாபாத்,டிசெ.21

தூக்கு தண்டனை நிறைவேற்றப்படும் முன்பே முஷரப் இறந்துவிட்டால், அவரது உடலை இழுத்துவந்து சென்ட்ரல் (மத்திய) சதுக்கத்தில் 3 நாள்களுக்குத் தொங்கவிட வேண்டும் என்று சிறப்பு நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பு முழு விவரத்தில் கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் இராணுவத் தளபதியாக இருந்த முஷரப் 2001 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி நடத்தி நவாஸ் ஷெரிபிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றி அந்நாட்டின் அதிபரானார்.

2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் திகதி நெருக்கடி நிலையை அறிவித்தார். டிசம்பர் 15 ஆம் திகதி வரை நெருக்கடி நிலை நடைமுறையில் இருந்தது.

2014 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று நவாஸ் ஷெரிப் மீண்டும் பிரதமராக பதவி ஏற்றதும், தனது ஆட்சியைப் புரட்சி மூலம் கைப்பற்றியதற்காகவும், நெருக்கடி நிலையை கொண்டு வந்ததற்காகவும் முஷரப் மீது தேசத் துரோக வழக்கு பதிவு செய்தார். 2016 ஆம் ஆண்டு சிகிச்சைக்காக துபாய் சென்ற முஷரப் பின்னர் நாடு திரும்பவில்லை.

விநோத நோயால் பாதிக்கப்பட்டுள்ள அவர் துபாயில் உள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இஸ்லாமாபாத்தில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டு 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்தத் தேசத் துரோக வழக்கை விசாரித்து வந்தது. கடந்த 17 ஆம் திகதி சிறப்பு நீதிமன்றம் முஷரப்புக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. 2 நீதிபதிகள் இந்தத் தீர்ப்பையும், ஒரு நீதிபதி மாறுபட்ட கருத்தையும் தெரிவித்து இருந்தனர்.

தீர்ப்பு முழு விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்று நீதிபதிகள் கூறியிருந்தனர். அதன்படி நேற்று அமர்வுக்கு தலைமையேற்றுள்ள பெஷாவர் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி வகார் அகமத் சேத் தீர்ப்பு முழு விவரத்தை வெளியிட்டார். 167 பக்கங்கள் கொண்ட அதில் கூறியுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு: –

குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் நாங்கள் அவர் குற்றவாளி எனதெளிவாக உணர்ந்துள்ளோம். எனவே தண்டனை விதிக்கப்பட்ட அவரது கழுத்தில் தூக்கிட்டு இறக்கும் வரை தொங்கவிட வேண்டும்.

வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்ற தண்டனை பெற்றவரை கைது செய்ய தங்களால் முடிந்த அளவு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுக்கு உத்தரவிடுகிறோம். அதோடு, சட்டப்படி அவரைத் தூக்கிலிட்டு தண்டனையை நிறைவேற்றுவதையும் உறுதி செய்ய வேண்டும்.

ஒருவேளை தூக்கிலிடப்படும் முன்பே அவர் இறந்துவிட்டால், அவரது உடலை இஸ்லாமாபாத்தில் உள்ள டி – சவுக் (சென்ட்ரல் சதுக்கம்) பகுதிக்கு இழுத்துவந்து 3 நாள்களுக்கு தொங்கவிட வேண்டும். – இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இது பகை தீர்க்கும் பழிவாங்கல் நடவடிக்கைதானாம் நீதி வெல்லும் என முஷரப் முழு அளவில் நம்பிக்கை!

## ஆஸ்பத்திரிப் படுக்கையில் இருந்தபடி காணொலி மூலம் அவர் செய்தி



இஸ்லாமாபாத்,டிசெ.21

பகையைத் தீர்க்கப் பழிவாங்கும் நடவடிக்கை. நீதி வெல்லும் என்ற நம்பிக்கை உள்ளது – என மரண தண்டனை குறித்து முஷரப் கருத்து தெரிவித்துள்ளார்.

தேசத் துரோக வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷரப்புக்கு மரண தண்டனை விதித்து அந்த நாட்டு சிறப்பு நீதிமன்றம் கடந்த செவ்வாய்க் கிழமை அதிரடித் தீர்ப்பு வழங்கியது. நீதிமன்றத்தின் இந்த முடிவுக்கு பாகிஸ்தான் உராணுவம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலும் தனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து முஷரப் மேல்முறையீடு செய்வதற்கு பாகிஸ்தான் அரசு அவருக்குத் துணை நிற்கும் எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் தன் மீதான தனிப்பட்ட பகையைத் தீர்க்கப் பழிவாங்கும் நடவடிக்கையாக தனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு உள்ளதாக முஷரப் கருத்துத் தெரிவித்துள்ளார். துபாய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் முஷரப், ஆஸ்பத்திரி படுக்கையில் இருந்தபடியே பேசும் வீடியோவை அவரது பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி வெளியிட்டு உள்ளது. அந்த வீடியோவில் அவர் கூறியவை வருமாறு:–

அரசமைப்பின் கீழ் இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்க எந்த அவசியமும் இல்லை. ஆனால் என் மீதான சிலரின் தனிப்பட்ட பகை காரணமாக இது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதனால் எனது தரப்பு நியாயங்களைக் கேட்க நீதிமன்றம் மறுத்துவிட்டது. ஆனால் நீதி வெல்லும் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது. எனது சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசித்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவெடுப்பேன். எனக்கு துணை நிற்கும் பாகிஸ்தான் இராணுவத்துக்கும், மக்களுக்கும் எனது நன்றிகள். – இவ்வாறு அவர் பேசினார்.

# உலகிலேயே மிக உயரமான மரம் அமேசான் காட்டில் கண்டுபிடிப்பு!



பிரேசிலியா,டிசெ.21

உலகிலேயே உயரமான மரம் அமேசான் காட்டில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரேசிலில் உள்ள அமேசான் மழைக்காடுகளில் பிரேசில் மற்றும் இங்கிலாந்தைச் சேர்ந்த தாவரவியல் ஆய்வாளர்கள் மரங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அமேசான் காடுகளின் வடக்கு பிராந்தியத்தில் உள்ள ஜாரி ஆற்றங்கரையில் உலகிலேயே மிக உயரமான மரம் வளர்ந்திருப்பதை அப்போது கண்டுபிடித்தனர்.

'டினிசியா எக்சல்சா' என்று அழைக்கப்படும் அந்த மரம் 400 ஆண்டுகளுக்கு மேல் பழமையான மரங்களின் குழுவின் ஒரு பகுதி எனத் தெரியவந்துள்ளது. 'டினிசியா எக்சல்சா' தற்போது 290 அடி உயரத்துக்கு வளர்ந்துள்ளது.

இந்த வகை மரங்கள் ஒவ்வொன்றும் சுமார் 40 தொன் வரையிலான 'கார்பன் டை ஒக்சைடு' சேமிக்கும் திறன் கொண்டவை என்றும், எனவே மனிதர்களால் ஏற்படும் காற்று மாசுக்கு எதிரான போரில் இந்த மரம் விலைமதிப்பற்ற வளமாக இருக்கும் என்றும் தாவரவியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே ஜாரி ஆற்றங்கரையில் இதேபோல் பல மரங்கள் 100 அடிக்கு மேல் வளர்ந்திருப்பது தெரியவந்துள்ளது. இதனால் பல்வேறு நாடுகளை சேர்ந்த தாவரவியல் ஆய்வாளர்கள் ஆராய்ச்சிக்காக அமேசான் மழைக்காடுகளுக்கு படையெடுக்க தொடங்கி உள்ளனர்.

# பாவிகளை மன்னிப்பீராக!

- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -

மதமாற்ற சர்ச்சை தொடர்பாக கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் வரையும் வாராந்தக் கட்டுரைத் தொடரின் நான்காம் அங்கம் இது.



**(சென்றவாரம்)**

**குறிப்பாக கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த சில மதத்தலைவர்களும், அம்மதத்தைப் பின்பற்றுவோர் சிலரும், நம் பிரதேசத்தில் சிறுபான்மை யினராக இருந்துகொண்டு, பெரும்பான்மை பலம் பெற்ற இந்து மதத் தவர்களை, வெளிப்படையாக வெறுக்கவும் விமர்சிக்கவும் செய்வதோடு, அம் மதத்தாரை அடக்கியாளவும் முயன்று வருகின்றனர். தமது உல களாவிய பலம்கொண்டு இப்பிரதேசங்களில், பகிரங்கமாக இந்து மத் தவர்களை மதமாற்றம் செய்யும், இவர்களது செயற்பாடுகள் அரு வருக்கத்தக்கன. இது தவறு என்று யாரும் விரல் நீட்டினால், தம் மதத்தி ற்குள் இருக்கும் பிரிவுகளை எடுத்துக் காட்டி, நான் இல்லை அவர்தான், அவரில்லை இவர்தான் என்று, இவர்கள் செய்யும் விளையாட்டு வேடிக்கையானது. இவர்களுள் எத்தனை பிரிவுகள் இருந்தாலும் அத்தனை பிரிவுகளும், மதமாற்ற முயற்சியைப் பகிரங்கமாகச் செய்வது வெளிப்படை. அதுபற்றிய ஒரு வேடிக்கையான விடயத்தை அடுத்த வாரம் சொல்கிறேன்.**

உலகம் எவ்வளவு வேடிக்கையானது என்பதற்கு,
நான் சொல்லப்போகும் நிகழ்வு சாட்சி பகரும்.
ஒருநாள், நல்லூர்க் கோயிலுக்கு அருகில் உள்ள,
எங்களது கம்பன்கோட்டத்தின் வாசலில் நான் நின்று கொண்டிருக்கிறேன்.
எனது நெற்றி நிறைய விபூதி.
நெற்றியின் நடுவில் பெரிய குங்குமப் பொட்டு.
வழமையான எனது காவிநிறத்து உடை.
ஏதோ வேலையாய் மேற்தோற்றத்தோடு வாசலில் நின்ற என்னை நோக்கி,
இளம் வயதுடைய ஓர் ஆணும் பெண்ணும் வந்தனர்.
எனக்கு அறிமுகம் இல்லாதவர்கள்.
என்னோடு சிறிது பேசவேண்டும் என்றார்கள்.
நம் பண்பாட்டின்படி உள்ளே அழைத்துச் சென்றேன்.

*****

உள்ளே வந்து அவர்கள் அமர்ந்ததும்தான்,
அவர்களின் கையில் இருந்த பைபிள் நூலும், செபமாலையும் என் கண்ணில் பட்டன.
உடனே அவர்கள் வந்த நோக்கம் எனக்குப் புரிந்தது.
என்றாலும் என்ன பேசப்போகிறார்கள் என்று அறிய,
"வந்தவிடயம் என்ன?" என்று அவர்களைப் பார்த்து அப்பாவியாய்க் கேட்டேன்.
உடனே அவர்கள் தங்கள் மதமாற்றப் பிரச்சாரத்தை வீச்சாகத் தொடங்கினார்கள்.
நான் தொடர்ந்தும் என் அப்பாவி வேடத்தைக் கடைப்பிடித்து,
அவர்களின் பேச்சை ஆர்வமாய்க் கேட்பதாய் சிறிது நடித்தேன்.
அவர்கள் ஊக்கம் மிகைப்பட்டது.
கொஞ்சம் கொஞ்சமாக தங்களின் கடவுளே கடவுள் என்றும்,
மற்றைக் கடவுள்கள் எல்லாம் பேய்களின் வடிவங்கள் என்றும்,
துணிவாகச் சொல்லத் தொடங்கினார்கள்.
இனி பொறுப்பதில்லை என்ற நிலைக்கு நான் வந்தேன்.

*****

பேசிக் கொண்டிருந்த அவர்களைக் கைகாட்டி நிறுத்தினேன்.
"உங்கள் விடயங்கள் எல்லாம் சொல்லிவிட்டீர்களா?" என்று கேட்டேன்.
"ஆம்" என்றார்கள்.
"நான் மதம் மாறவேண்டும் என்பதுதானே உங்கள் விருப்பம்?"
என்று தொடர்ந்து கேட்டேன்.
அதற்கும் "ஆம்" என்றார்கள்.
"நல்லது. உங்கள் கருத்துக்களைச் சொல்லிவிட்டீர்கள்.
இனி என் சமயக் கருத்துக்களை உங்களுக்குச் சொல்லப்போகிறேன்.
நீங்களும் என்னைப் போலப் பொறுமையாக இருந்து கேட்கவேண்டும்" என்றேன்.
அவர்களுக்குள் சிறிய பதற்றம் உண்டானது.
"இல்லை.இல்லை.நாங்கள் இயேசுவின் விசுவாசிகள்,
மற்றச் சமயச் செய்திகளைக் கேட்கமாட்டோம்" என்றார்கள்.

*****

நான் சற்றுக் குரலை உயர்த்தினேன்.
"என் நெற்றியில் இருந்த விபூதி, குங்குமம் ஆகியவற்றைப் பார்த்து,
நான் சைவன் என்று தெரிந்த பின்னும்,
உங்கள் சமயச் செய்திகளை வீட்டுக்குள் வந்து சொன்னீர்களல்லவா?
அதுமட்டும் எப்படி உங்களால் முடிந்தது?" என்றேன்.
மெல்ல முழியைப் பிரட்டத் தொடங்கினார்கள்.
"இப்பொழுது நான் எனது சமயச் செய்திகளைச் சொல்லப்போகிறேன்.
நீங்கள் கேட்டுத்தான் ஆகவேண்டும்.
இறுதியில் யார் சமயம் மாறுவது என்று முடிவு செய்வோம்."
என்று சொல்லி கதவை இழுத்துப் பூட்டிவைத்து,
வேண்டுமென்றே எங்கள் சைவசமயச் செய்திகளை,
அவர்கள் வெறுக்க வெறுக்க எடுத்துச் சொன்னேன்.
நிறைவில் அழாக்குறையாக விட்டாற்போதும் என்று ஓடிவிட்டார்கள்.

*****

சைவக்கோயிலின் அருகில் சைவ சின்னங்களோடு நின்ற என்னையே,
மதம்மாற்ற நினைக்கிறார்கள் என்றால்,
அவர்களின் துணிவை என்ன சொல்வது?
இளையர்களான இவர்கள் இரண்டிரண்டுபேர்களாக,
நாள் முழுக்க இதே வேலையாக ஊர் முழுக்கத் திரிகிறார்கள் என்றால்,
அவர்களின் வாழ்வாதாரத்திற்கான வழிதான் என்ன?
யாரோ சம்பளம் கொடுக்காமலா அவர்கள் இந்த வேலையைச் செய்கிறார்கள்?
அப்படி அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பவர்கள் யார்?
கேள்வி கேட்டு விடயத்தின் வேரை அணுகினால்,
பலரும் வெட்கப்படவேண்டிவரும் என்பது நிச்சயம்.

*****

இந்த அனுபவம் கொழும்பு வந்த பிறகும் எனக்கு ஏற்பட்டது.
உலகளாவிய செல்வ வளமும், பலமும் இருக்கும் காரணத்தால்,
மற்ற சமயத்தைச் சேர்ந்தவர்களை,
வசதிகளைக் காட்டி தம்பக்கம் இழுப்பதென்பது எப்படி நியாயமாகும்?
இதுதான் இயேசுநாதர் காட்டிய வழியா?
இல்லவே இல்லை!
முப்பத்திரண்டு வெள்ளிக்காசுகளைக் காட்டி,
யுதாஸை மனமாற்றி, இயேசுபிரானைக் காட்டிக் கொடுக்கவைத்து,
அவரைச் சிலுவையில் அறைந்து மகிழ்ந்த.
துரோகிகளின் வழியல்லவா இது.?
ஒரு மகானின் வழி நிற்பதாய்ச் சொல்லிக்கொண்டு,
ஒரு துரோகக் கும்பல் காட்டிய பாதையில் வழி நடப்பது எப்படி நியாயமாகும்?

*****

சமயத்துறை சார்ந்த என்னையே துணிந்து தம்பக்கம் ஈர்க்க முற்படுபவர்களிடம்,
சாதாரண மனப்பலவீனமும், வறுமையும் உற்ற மக்கள் அகப்பட்டால்,
அவர்கள் கதி என்னாகும்?
இது தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் மட்டும் நடக்கும் விடயமன்று.
நாடுபூராகவும் இது நடக்கிறது.
அதனால்தான் பௌத்த மதத்தவர்களும்,
மதமாற்றத் தடைச்சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று,
இடையில் கொதித்தெழுந்தார்கள்.

*****

வடக்கிலும் கிழக்கிலும் பெரும்பான்மை பலம் பெற்றிருந்தும்,
மாற்று மதத்தவர்களை அணைத்து நடக்கும்,
இந்து மதத்தவர்களின் பெருந்தன்மையை,
அவர்களின் பலவீனமாய் நினைந்து,
அவர்களைச் சீண்டிப் பார்க்கும் வேலையை,
மேற்படி 'மத' மனிதர்கள் தொடங்கியிருப்பது,
மிகமிக வேதனையான விடயமாம்.

*****

இந்நாட்டின் பேரினத்தாருள் மொழியால் அங்கம் வகிப்பதாலும்,
உலகளாவி விரிந்த தம் மதத்தின் நிர்வாக பலத்தாலுமே,
இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் தாம் சிற்றினமாய் இருந்துகொண்டு,
பேரினமாய் அங்கு வாழும் இந்துக்களை விலைக்கு வாங்கவும்,
மிரட்டி வாழவும் இவர்களால் முடிகிறது.

*****

இவ்விடயத்தில் நம் இந்துமதத்தாரின் சில குறைகளையும்,
நாம் ஒத்துக்கொண்டே ஆகவேண்டும்.
உலகெங்கும் விரிந்திருந்தாலும் மதத்தை ஓர் அடையாளமாய்க் கொண்டு,
ஒன்றுபடும் சக்தியை நம் இந்துமதத்தார் இன்னும் பெறவில்லை.
அதுதான் நமது பலவீனத்தின் அடிப்படையாய் இருக்கிறது.

*****

ஆனால் அதனையும் பிழையென்று சொல்லமுடியவில்லை.
என்றைக்குமே தம் மதம் சார்ந்த மக்கள் தொகையைப் பெருக்குவதையும்,
உலகளாவிய நிர்வாகத்தை உருவாக்குவதையும்,
அதைவைத்து மற்றைய மதங்களை விழுங்க நினைப்பதையும்,
நம் இந்துமதம் என்றும் ஏற்றுக் கொண்டதில்லை.
அது பொருள் வளர்ச்சிக்காக ஏற்பட்ட மதமன்று.
அருள் வளர்ச்சிக்காக ஏற்பட்ட மதம்.

*****

(11 ஆம் பக்கம் பார்க்க)

என்னைக் கைது செய்ய வேண்டும் என்று தென்னிலங்கையில் கூறுவது அவர்களு டைய உள்ளெண்ணங்களைப் படம்பிடித் துக் காட்டுகிறது என வடக்கு மாகாண முன் னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரி வித்துள்ளார்.

ஆனால் உண்மையைத் தொடர்ந்து நான் கூறிக் கொண்டு தான் வருவேன் என்றும் அவர் குறிப்பிட் டார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் ஊடகங்க ளுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண் டவாறு கூறினார்.

**கேள்வி: -** தென்னிலங்கையில் உங்களுக்கு எதிராக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக உங்களைக் கைது செய்ய வேண்டுமென்று கோரி வருவதை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

**பதில்:-** என்னிடம் கேள்வி ஒன்று தரப்பட்டது. அந்தக் கேள்விக்கான பதிலை நான் ஆங்கிலத்தில் எழுதி அனுப்ப அவற்றைப் பத்திரிகைகள் பிரசுரித் தன. அதன் காரணமாக அதைப் பொது மக்கள் வாசித்து தென்னிலங்கையிலே முக்கியமாக சிங்கள மக்கள் கொதிப்படைந்திருக்கின்றார்கள், கோபம் கொண்டுள்ளார்கள் என்று தெரிகின்றது. இதிலே கோபம் கொள்ள வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

நான் கூறுவது எனக்குத் தெரிந்த வரலாற்றின் அடிப்படையிலேயே. நான் அறிந்து கொண்ட தரவுகளிலிருந்து அந்தக் கருத்துக்களை வெளியிட் டிருக்கின்றேன். என் கருத்துக்கள் பிழையென்று யாராவது நினைத்தால் அதற்கான மாற்றுக்கருத் துக்களை அவர்கள் தரலாம். 'நீங்கள் அவ்வாறு கூறியிருக்கின்றீர்கள் உண்மையில் வரலாற்றின் படி இவ்வாறு தான் நடந்துள்ளது,

ஆகவே அது இது தான் வரலாறு' என்று எனக்கு எடுத்துக்கூறலாம். அவ்வாறு ஏதும் கூறாமல் 'அவரை கைது செய்யுங்கள்; அவருக்கு அடியுங்கள்; அவரு டன் வன்முறையில் ஈடுபடுங்கள்' என்றெல்லாம் கூறுவது ஏதோ தங்களுடைய உண்மைகள் எல்லாம் வெளியில் வரக்கூடுமோ என்றதொரு பயத்தின் நிமித்தமே அவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் போன்று எனக்குத் தெரிகின்றது. நான் கூறியிருப்பது உண்மையென்பது என்னுடைய கருத்து.

உண்மையைக் கண்டு அவர்கள் பயப்படவேண் டிய அவசியம் இல்லை. ஆனால் அந்த உண்மை வெளிவந்தால் தாங்கள் இதுவரை காலமும் பொய் மையை எவ்வாறு வெளிப்படுத்தி வந்தார்களோ அந்த பொய்மை அழிந்துவிடும் என்றதொரு ஏக் கத்தில் அவர்கள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்களோ நான் அறியேன்.

ஆனால் எது எவ்வாறாக இருப்பினும் நான் கூறுவது உண்மையென்றால் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். அது பிழை என்றால் அவர்கள் அதற்குத் தோதான எதிர்க்கருத்துக்களைத் தர வேண்டும். அல்லது நான் கூறியவை பொய் என்று அவர்கள் நினைப்பதால் 'நாங்கள் அதைப் பற்றி எதுவுமே பேச வேண்டிய அவசியம் இல்லையே' என்று வாளாதிருக்கலாம்.

இவற்றையெல்லாம் விட்டுவிட்டு அவர்கள் என்னைக் கைது செய்ய வேண்டும் என்று கூறுவது அவர்களுடைய உள்ளெண்ணங்களை படம்பிடித் துக் காட்டுகிறது. ஏதோவொரு பயத்தினால், அதாவது தங்களுடைய கபடங்கள் வெளிப்பட்டு விடுமோ என்ற பயத்தின் நிமித்தமாக அவர்கள் இவ்வாறு நடந்துகொள்கிறார்களோ என்று என்னை எண்ண வைக்கின்றது.

ஆகவே இவ்வாறான கைதுகளும் என்னை விமர்சிப்பதும் தேவையற்றவை என்று தான் நான் பார்க்கின்றேன். ஒருவர் தனது கருத்துக்களை வெளிப் படுத்துவது ஜனநாயக நாட்டில் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு விடயம். நான் வன்முறையைச் சார்ந்து கருத் துக்களை வெளிப்படுத்தவில்லையே. ஆனால் உண்மையை தொடர்ந்து நான் கூறிக்கொண்டு தான் வருவேன்.

**கேள்வி:-** உங்களது தலைமையில் புதிய கூட்டு ஒன்று உருவாக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த முயற்சிகள் தற்போது எந்தக் கட்டத்தில் இருக் கின்றன?

**பதில்:-** அது உண்மைதான். கொள்கையளவிலே பலர் ஒன்றுசேர்ந்து புதிய கூட்டொன்றை அமைக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்றோம். அது அநேகமாக இந்த மாதக் கடைசிக்கு முன்னர் ஒரு நிச்சயமான நிலைக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கின்றோம். கொள்கைகளிலே எங்களுக் குள் பிரச்சினை இல்லை.

அவற்றிலே எங்களுக்குள் புரிந்துணர்வு இருக் கின்றது. ஆனால் நடைமுறையில் நடந்துகொள்ள வேண்டிய விடயங்களிலே எவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும், எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். தேர்தல் காலத் திலே என்னென்ன விடயங்கள் எங்களால் பரிசீலிக் கப்படவேண்டும் என்பது சம்பந்தமாக நாங்கள் ஒரு ஆவணத்தைத் தயாரித்துக்கொண்டிருக்கின்றோம். வெகு விரைவில் அது தயாரிக்கப் பட்டுவிடும் என்பது என்னுடைய எதி ர்பார்ப்பு.

**கேள்வி:-** சமகால அரசு முன்னெ டுத்து வருகின்ற நடவடிக்கைகளை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

**பதில்:-** சமகால அரசு என்று நாங்கள் கூறும்போது புதிய ஜனாதி பதியைத் தான் நாங்கள் குறிப்பிட வேண்டியிருக்கின்றது. ஏனென் றால் அவருடைய தேர்வின் பின்னர் தான் புதிய அரசாங்கம் அல்லது சமகால அரசு பதவிக்கு வந்திருக்கின் றது. பதவியை ஏற்றுக்கொண்டது முதல் ஜனாதிபதி அவர்கள் எடுத்து வந்திருக்கின்ற பல நடவடிக்கைகள் எங்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டுகின் றன.

உதாரணமாக ஒரு ஜனாதிபதி முன்னர் வெளியிலே போகும் போது



(எஸ்.நிதர்ஷன்)

# உண்மையை சொல்ல தயங்கவே மாட்டேன்!

## விக்னேஸ்வரன் சொல்கிறார்

பல வாகனங்கள் அவரின் பின் செல்வன. பல இரா ணுவத்தினர் செல்வார்கள். அவற்றையெல்லாம் கட்டுப்படுத்தியிருக்கின்றார் புதிய ஜனாதிபதி. அத் துடன் ஜனாதிபதி செல்கின்றார் என்பதற்காக போக்கு வரத்தை நிறுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறியிருக்கின்றார். தானும் சாதாரண மக் கள் போன்று வழக்கமான போக்குவரத்தின் ஊடாக செல்ல வேண்டும் என்ற ஒரு கருத்தையும் முன்னெ டுத்து இருக்கின்றார்.

இவ்வாறான பல நல்ல விடயங்களை இதுவரை காலமும் எங்களுடைய தலைவர்கள் முன்னெடுத்து வரவில்லை. பந்தாகாட்டி வந்தார்கள். சில நாடாளு மன்ற தமிழ் அங்கத்தவர்கள் கூட காற்றில் பறந்து கொண்டிருந்தார்கள். தரையில் இறங்க மறுத்தி ருந்தார்கள். இப்பொழுது இவர்களுக்கெல்லாம் ஜனாதிபதி முன்மாதிரியாக நடந்து பாடம் கற்பித்துக் கொண்டிருக்கின்றார்.

தற்போது ஜனாதிபதி அவர்கள் தமக்கென விதித் திருக்கும் கட்டுப்பாடுகளை நாங்கள் வரவேற்கின் றோம். ஆனால் அதே நேரத்திலே அவருக்கு வாக்க ளித்திருக்கும் பல சிங்கள மக்களினுடைய எதிர்பார்ப் பின் காரணமாகவோ என்னவோ சில ஒவ்வாத நட வடிக்கைகளை அவர் தமிழர்கள் சம்பந்தமாக எடுக்க இருக்கின்றார் போல் தெரிகின்றது. அவருடைய கருத்துகள் சம்பந்தமாக நான் விரைவிலேயே என் னுடைய கருத்தை வெளியிடுவேன்.

ஆனால் தமிழ் மக்களுக்கு அதிகாரப்பரவலாக் கம் தேவையில்லையென்ற அவருடைய கருத்து எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. அதிகாரப் பரவலாக்கம் தேவை எமக்கே. சிங்கள மக்களுக்கு அல்ல. அவரின் கூற்றை நான் வன்மையாக கண் டிக்கின்றேன். கடந்த 100 வருட காலமா கத் தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளுக்காக போராடு கின்றார்கள். அவர்களுக்கு அதிகாரப்பரவலாக்கம் தேவையில்லை, பொருளாதார அபிவிருத்தியே போதும் என்று கூறுவது அவருக்கு உண்மையாகவே தமிழ் மக்களின் பிரச்சினை தெரியாதிருக்கின்றது அல்லது தெரிந்து கொண்டும் மறைக்கப் பார்க்கின் றாரோ என்று எண்ண வேண்டி இருக்கின் றது.

ஆகவே சமகால அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை ஒரு பக்கம் பார்த்தால் நன் மைகள் சிலவற்றைக் காண்கின்றோம். மறுபக்கம் பார்த்தால் மக்களுடைய முக்கியமாக தமிழ் மக் களுடைய வருங்காலம் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதொரு கட்டத்திற்கு அவர் கொண்டுவந்தி ருப்பதை நாங்கள் அவதானிக்கின்றோம்.

**கேள்வி:-** தமிழ்க்கட்சிகளுக்குள் ஏற்பட்டு வரும் பிளவுகள், புதிய கட்சிகள் உருவாக்கம் தொடர்பில் உங்கள் பார்வை எவ்வாறாக உள்ளது?

**பதில்:-** இந்த பிளவுகள் ஏற்பட்டதற்கு காரணம் 2013 அளவில் தயாரிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞா பனங் களுக்கு முரணான விதத்திலே த.தே.கூ.ப் பின் தலைமைத்துவம் நடந்துகொண்டதால். அக் கூட்ட மைப்பை விட்டு ஒவ்வொருத்தராக வெளியே வரவேண்டிய அவசியம் அவ்வாறான காரணங் களாலேயே ஏற்பட்டிருக் கின்றது.

இந்தப் பிளவுகள், புதிய கட்சிகள் உருவாக் கம் போன்றவை எல் லாம் தேர்தல் விஞ்ஞா பனத்தின் அடிப்படை யிலே எதை எதனை மக்கள் எதிர்பார்த்தார் கள் என்பதைத் தலைமைத்துவம் மறந்து தான் தோன்றித் தனமாக இதுவரை காலமும் நடந்து வந்ததன் பின் விளைவுகளாவன.

அண்மையில் திரு.சம்பந்தன் 'கற்பனை இலக்குகள்' என்று தாங்களே தயாரித்த விஞ் ஞாபனத்தில் காணும் இலக்குகளை வர்ணித் துள்ளார். கற்பனை களைக் கட்சிகளின் கருத்தாக, இலக்காக விஞ்ஞா பனங்களில் மக்கள்முன் வைத் தமை ஏன் என்பது பற்றி அவர் விளக்கம் அளிக்க வில்லை.

அவர் கூறும் கற்பனைகளை நாம் அடையாவிட் டால் இலங்கையில் பறங்கியருக்கு நடந்ததே எமது வட கிழக்குத் தமிழ் மக்களுக்கும் நடக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். கற்பனைகளை தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளடக்காமல் நாங் கள் O.P.Đ.P. ஐப் பின்பற்றிப் போகின்றோம் என்று என்னிடம் ஐயா அவர்கள் 2013 ல் கூறியிருந்தாரா னால் நான் நலமாக என் கொழும்பு வீட்டிலேயே தங்கியிருந்திருப்பேன். அரசியலுக்கு வந்திருக்க மாட்டேன்.

ஆகவே கொள்கை அடிப்படையிலே கட்சிகள் ஒருங்கிணைய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. துருவமயமாக்கத்திற்கு முதற்படியாகத்தான் இந்தப் பிளவுகளையும் புதிய கட்சிகளின் உருவாக்கத்தை யும் நான் காண்கின்றேன். அதாவது Polarization என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். கொள்கை ரீதி யாக நம்மவர்கள் தங்களுக்குள்ளேயே முரண்பட்டு நிற்கும்போது இந்த Polarization ஐ ஏற்படும். ஒரே வித இறகுகளைக் கொண்ட பறவைகள் இனி ஒன்றி ணைய வேண்டும். அவ்வாறான இணைப்புக்கு முன்பு தான் இந்த பிளவுகளும் புதிய கட்சி உருவாக் கங்களும் நடந்துகொண்டிருக்கின்றன.

வெகுவிரைவிலே அவையெல்லாம் ஒரு நிலைக்கு வந்துவிடுவன. அப்பொழுது ஒவ்வொரு கட்சியன ரதும் குறிக்கோள்கள், கொள்கைகள் தெரிய வரு வன. அவற்றை மக்கள் ஏற்றுக்கொள்வார்களா இல் லையா என்பதைப் பற்றி மக்கள் தான் தீர்மானித்து வாக்குத்தர வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே அதுவரையிலே நாங்கள் எங்களுடைய கொள்கை சார்ந்த நடவடிக்கைகளிலே தொடர்ந்து நடந்து கொண்டு வர இருக்கின்றோம். மக்களினுடைய வாக்குகளைக் கண்டதன் பிற்பாடுதான் எங்களுக் குத் தெரிய வரும் இந்தப் பிளவுகளும் புதிய கட்சிகள் உருவாக்கமும் சரியான வழியில் சென்றனவா, இல்லையா என்று.

**கேள்வி :-** 'இலங்கை சிங்கள தேசம்' என்ற கருத்து தென்பகுதியில் வலுப்பெற்றுவருகின்றது. அப்படியாயின் தமிழரின் இடம் என்ன என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

**பதில் :-** இது பற்றி நான் ஏற்கனவே ஆங்கிலத் தில் பதில் அளித்துவிட்டேன். அதைத் தமிழிலும் மொழிபெயர்த்து சில பத்திரிகைகள் பிரசுரித்துள் ளன. சுருங்கக் கூறுவதெனில் இலங்கை சைவத் தமிழ் மக்களுக்கே உரியது. புத்தர் காலத்திற்கு முன் பிருந்தே சைவத் தமிழர்கள் இலங்கையில் இருந்து வந்துள்ளார்கள். முதலில் பௌத்தத்திற்கு மாறிய வர்களும் அவர்களே. சிங்களமொழி அப்போது பிறந்திருக்கவில்லை. கி.பி. 6ஆம், 7ஆம் நூற் றாண்டுகளில்த் தான் சிங்களம் என்பது ஒரு மொழி யாகப் பரிணமித்தது.

(11ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikathir






# தீபக் சஹாா் விலகல்!

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான ஒருநாள் தொடரிலிருந்து வேகப்பந்து வீச்சாளரான தீபக் சஹாா் விலகியுள்ளாா்.

விாக்கப்பட்டினத்தில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியின்போது, தீபக் சஹாா் உபாதைக் குள்ளானாா்.

இதன் பின் முதுகுப்பகுதியில் அவருக்கு உபாதை ஏற்பட்டிருந்தது. இதனைத் தொடா்ந்து நேற்று முன் தினம் பரிசோதனை மேற்கொண்ட பின்னா் சிறிய காலம் ஓய்வு தேவை என்பதன் அடிப்படையில் எஞ்சியுள்ள ஒருநாள் போட்டிக்கான அணியிலிருந்து அவா் நீக்கப்படுகிறாா் என இந்தியக் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கடந்த ஒகஸ்ட் மாதம் மேற் கிந்தியத் தீவுகள் அணியுடன் ரி – 20 சா்வதேச அறிமுகம் பெற்றுக்கொண்ட 27 வயதுடைய வேகப் பந்துவீச்சாளா் நவ்தீப் சைனி, ஒருநாள் சா்வதேசப் போட்டியில் அறிமுகம் பெறுகிறாா்.

இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணியின் வேகப் பந்துவீச்சாளா்கள் வரிசையில் 27 வயதுடைய வலது கை வேகப் பந்துவீச்சாளா் தீபக் சஹாா், 7 ஓவா்கள் வீசி, ஓா் ஓட்டமற்ற ஓவரு டன் 44 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து விக்கெட் எதனையும் கைப்பற்றவில்லை.

இதேவேளை முன்னதாக வேகப் பந்துவீச்சாள ரான புவ்னேஸ்வா் குமாா் உபாதை காரணமாக, அவருக்குப் பதிலாக சா்துல் தாகூா் இணைக்கப்பட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சா்வதேச தொடரின் முதல் இரண்டு போட்டிகளும் நிறைவுக்கு வந்துள்ள நிலையில் தொடா் 1 – 1 என்ற அடிப்படை யில் தற்போது சமநிலை பெற்றுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவ தும், இறுதியுமான ஒருநாள் போட்டி நாளை கட்டாக் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# ரூ. 20 கோடிக்கு ஏலம் உற்சாகத்தில் ஆட்டம் போட்ட ஹெட்மியா்

ஐ.பி.எல். ஏலத்தில் எதிா்பாா்த்ததை விட அதிக விலைக்கு ஏலம் போனதால், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் நட்சத்திர வீரா் ஷிம்ரான் ஹெட்மியா் உற்சாகத்தில் ஆட்டம் போட்டுள்ளாா்.

இந்தியாவில் வருடம் தோறும் வெகுவிமரிசை யாக நடைபெறும் வரும் உள்ளூா்ப் போட்டியான இந்தியன் பிரீமியா் லீக்கில், உலகம் முழுவதிலு மிருந்து ஏராளமான கிரிக்கெட் வீரா்கள் பங்கேற் பாா்கள்.

2020ஆம் ஆண்டுக்கான கிரிக்கெட் வீரா்கள் ஏலம் நேற்று முன் தினம் கொல்கத்தாவில் விறுவி றுப்புடன் நடைபெற்றது. அனைத்து அணியினரும் போட்டிபோட்டுக்கொண்டு வீரா்களை ஏலம் எடுத் தனா்.

இதில் அதிகபட்சமாக ஆஸ்திரேலிய அணியின் பேட் கம்மின்ஸ், கொல்கத்தா அணிக்கு ரூ. 40 கோடி விலைக்கு ஏலம் போனாா். அவரைத் தொடா்ந்து மக்ஸ்வெல் 27 கோடிக்கு பஞ்சாப் அணிக்கு ஏலம் போனாா்.

இதேபோல பெரிய தொகைக்கு ஏலம் போகலாம் என பெரிதும் எதிா்பாா்க்கப்பட்ட, மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடி ஆட்டக்காரா் ஷிம்ரான் ஹெட் மியா், டில்லி அணிக்கு ரூ .19 கோடிக்கு ஏலம் போனாா்.

இதனை உற்சாகமாக அவா் நடனமாடிக் கொண் டாடியுள்ளாா். அந்த வீடியோ காட்சியினை டெல்லி அணிதங்களுடையடுவிட்டா்பக்கத்தில்பகிா்ந்துள்ளது.

# மேன்முறையீடு செய்யும் ரஷ்யா

ஒலிம்பிக்கில் பங்கேற்க விதிக்கப் பட்டுள்ள தடைக்கு எதிராக விரைவில் மேன்முறையீடு செய்யப்படும் என ரஷ்யா அறிவித்துள்ளது.

ரஷ்ய ஊக்கமருந்துப் தடுப்பு அமைப் பான ரசாடாவின் கண்காணிப்புக் குழுவின் தலைவா் அலெக்சாண்டா் இவ்லேவ இதனைத் தெரிவித்துள் ளாா்.

சுவிஸிலுள்ள விளையாட்டு நடுவா் மன்றத்தில் வாதாவின் தடையை எதிா்த்து ரஷ்யா மேன்முறையீடு செய்யும் என அவா் குறிப்பிட்டாா்.

ஊக்கமருந்துச் சோதனையில் ரஷ்ய வீரா், வீராங்கனைகள் சிக்கியமையை யடுத்து அந்நாட்டின் சாா்பில் சா்வ தேச போட்டிகளில் விளையாடவும், சா்வதேச போட்டிகளை ரஷ்யா நடத்தவும் 4 ஆண்டுக்கு சா்வதேச ஊக்க மருந்து தடுப்பு அமைப்பான வாதா தடை விதித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.





# ஐ.பி.எல். ஏலத்தில் வாங்கப்பட்ட ஒரே இலங்கை வீரா் இவா்தான்!

2020ஆம் ஆண்டின் ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் நேற்று நடை பெற்ற நிலையில் இதில் இலங்கை யைச் சோ்ந்த ஒரு வீரா் மட்டும் ஏலத்தில் வாங்கப்பட்டுள்ளாா்.

ஐ.பி.எல். ரி - 20 தொடரின் 13 ஆவது சீசன் அடுத்த ஆண்டு நடை பெற உள்ளது.

அதில் பங்கேற்கும் வீரா்களின் ஏலம் நேற்று கொல்கத்தாவில் நடை பெற்ற நிலையில் மொத்தமாக 62 வீரா்கள் ஏலத்தில் வாங்கப்பட் டனா்.இந்த 62 போில் 29 வெளி நாட்டு வீரா்களும் அடக்கமாகும். இவா்கள் மொத்தமாக ரூ 358 கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட் டனா்.

ஏலத்தில் இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரா் இசுறு உதானாவை பெங்களூா் ராயல் சலஞ்சா்ஸ் அணி ரூ 127 லட்சம் கொடுத்து தங்கள் அணிக்கு வாங் கியது.

இதை தவிர வேறு இலங்கை வீரா்கள் நேற்று முன் தினம் ஏலத் தில் எடுக்கப்படவில்லை.

# பஞ்சாப் தலைவராக ராகுல் நியமனம்!

ஐ.பி.எல். தொடரின், 13ஆவது அத்தியாயம் அடுத்த ஆண்ட நடைபெறவுள்ள நிலையில், இத்தொடரில் விளை யாடும் ஒவ்வொரு அணிகளும் தங்களின் தரப்பை வலுப்படுத்தி வருகின்றன.

அந்த வகையில், இதுவரை ஐ.பி.எல். தொடரில் சம்பியன் கிண்ணம் வெல்லாத கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, அண்மையில் அணிக்குள் பல மாற்றங்களை கொண்டுவந்தது.

இதற்கமைய முதற்கட்டமாக இரண்டு வருட ஒப்பந்தத் தில் அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட மைக் ஹசன், ஒப்பந்தம் முடிவதற்கு முன்னதாகவே தனது பதவியை இராஜினாமாச் செய்தாா்.

இதற்கு பின்னா், அணியின் செயற்பாடு இயக்குந ராக இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து ஜாம்பவான் அனில் கும்ப்ளே நியமிக்கப்பட்டாா்.

மேலும், ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் ஜோா்ஜ் பெய்லி துடுப்பாட்டப் பயிற்சியாளராக நியமிக்கப் பட்டாா்.

இதற்கிடையில், அவ்வப்போது, கடந்த இரு வருடங் களாக, கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவராகச் செயற்பட்டு வந்த அஸ்வினை விடுவித்தது.

பஞ்சாப் அணி, 2018ஆம் ஆண்டு ஐ.பி.எல். ஏலத்தில் அஸ்வினை இந்திய மதிப்பில் 19 கோடி ரூபாவுக்கு வாங்கியது. தற்போது, அதே தொகைக்கு அஸ்வின் டெல்லி அணிக்கு விட்டுக்கொடுத்துள்ளது.

இந்த நிலையில் தற்போது அணிக்கு சிறந்த அணித்தலைவா் தேவை என்ற கட்டாயத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான கே.எல். ராகுலை அணித்தலைவராக பஞ்சாப் அணி நியமித்துள்ளது.

இது குறித்து பஞ்சாப் அணியின் உரிமையாளா்களில் ஒருவரான நெஸ் வாடியா கூறுகையில், "எதிா்வரும் ஐ.பி.எல். தொடருக்கு ராகுலைக் அணித்தலைவராக நியமிப்பது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அவரை விம ரிசித்த விமா்சகா்களுக்கு அவா் பதிலடி தந்துள்ளாா்

துடுப்பாட்ட வீரராக மட்டுமல்லாமல் அணித்தலைவரா கவும் அவருடையத் திறனைப் பாா்ப்பீா்கள். அவா் எங்களு டைய ஒருமித்தத் தோ்வாகவே இருந்தாா்" எனக் கூறினாா்.

2018ஆம் ஆண்டு ஐ.பி.எல். சீசனுக்கு முன் கே.எல். ராகுல் 28 கோடி ரூபாவுக்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்குத் தோ்வானாா் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடா்ந்து அணி கொல்கத்தா நைட்ரைடா்ஸ் அணியின் தலைவராக தினேஷ் காா்த்திக் நீடிப்பாா் என அணியின் பயிற்சியாளா் பிரெண்டன் மக்கலம் தெரி வித்துள்ளாா்.



# வவுனியா வைத்தியசாலையில் நேற்று கிறிஸ்மஸ் தின நிகழ்வு





வவுனியா, டிசெ. 21

வவுனியா வைத்தியசாலையில் கிறிஸ்மஸ் தின நிகழ்வு நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது.

வவுனியா நாற்சதுர சுவிசேச சபை மற்றும் வைத்தியசாலை கிறிஸ்தவ ஐக்கிய அமைப்பு ஆகியன இணைந்து இந்த கிறிஸ்மஸ் நிகழ்வை நடத்தியிருந்தன.

வவுனியா வைத்தியசாலையில் ஒவ்வொரு நோயாளர் விடுதிகளாகச் சென்ற கிறிஸ்தவ ஊழியர்கள், கிறிஸ்தவ பாடல்களைப் பாடி அங்கிருந்தவர்களின் நோய்கள் குணமாக விசேட ஜெபத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் நோயாளர்களுக்கு சிற்றுண்டிகள் வழங்கப்பட்டமையுடன், சிறுவர் விடுதிக்குச் சென்று அங்கு கிறிஸ்மஸ் பாடல்கள் இசைத்து சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ – 100)

# உண்மையை சொல்ல...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே அந்த மொழி வருவதற்கு முன் இலங்கையில் சிங்களவர் இருக்கவில்லை. சுமார் 1300 அல்லது 1400 வருடங்களாகத்தான் சிங்களம் ஒரு மொழியாகப் பேசப்பட்டு வருகின்றது. அதற்குமுன் தமிழ் மொழியுடன் பாளி மொழி இருந்தது. துஷ்டகாமினி ஒரு பௌத்த தமிழன். எல்லாளன் ஒரு சைவத் தமிழன். அந்தக் காலத்தில் சிங்களமொழி இருக்கவில்லை. ஆகவே துட்டகைமுனுவைச் சிங்களவர் என்று அடையாளம் காட்டுவது எந்த முறையிலே சரி என்பதை மக்கள் தான் தீர்மானிக்கவேண்டும்.

**கேள்வி:-** வடக்கு மாகாண சபையில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு தற்போது சிறப்பு விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமிக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றதே. இது சம்பந்தமாக உங்களுடைய கருத்து.

**பதில்:-** இதுவரை அதுபற்றி நான் கேள்விப்படவில்லை. அவ்வாறான ஏதாவது ஒரு கொமிஷன் நியமிக்கப்பட வேண்டும் என்றால் தாராளமாகச் செய்யட்டும். ஏற்கனவே சில இளைப்பாறிய நீதிபதிகள் கொண்ட குழு ஒன்றை அவற்றைப் பற்றி ஆராய்ந்து தங்களுடைய கருத்துக்களை தெரிவித்து கொண்டிருந்தது.

இன்னுமொரு குழுவை நியமிப்பது என்றால் ஒன்று அதற்குரிய காரணங்களை அவர்கள் கூறவேண்டும். இரண்டு இனிவரப்போகின்றவர்கள் அந்த முன்னைய நீதிபதிகளுக்கு மேலான தரமுடையவர்கள் என்று கூறவேண்டும். அவ்வாறு எப்படிக் கூறப்போகின்றார்கள் எனத் தெரியவில்லை. இவ்வாறான ஆணைக்குழுவுக்கான அவசியம் என்னவென்றும் எனக்கு விளங்கவில்லை. அது பற்றி என்னால் வேறு ஒன்றும் கூறமுடியாது.

# பாவிகளை மன்னிப்பீராக!...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஞான பூமியாகிய கிழக்கில் உதித்ததால் இந்து மதத்திற்கு,
ஞானமே முதல் நோக்கமாய் என்றும் இருந்திருக்கிறது.
மேற்குலகாகிய பொருள் உலகில் உதித்ததாலோ என்னவோ
மேற்படி மதத்தாருக்கு உலகியல் வெற்றியே உயர்வாய்த் தோன்றி நிற்கிறது.
அதனால் தான் தம் மதத்திற்கான மக்கள் தொகையைப் பெருக்கும் முயற்சியில்,
அம்மதம் சார்ந்தவர்கள் நேர்மையற்ற பலவிதத்தாலும் இயங்கி நிற்கின்றனர்.

*****

தாம் உயர்வென்று நினைத்த ஒரு கருத்தை,
உலகத்தார்க்கு உபகரிக்க நினைப்பதில் என்ன தவறு இருக்கிறது?
சிலர் கேட்க நினைக்கலாம்.
நியாயமான கேள்விதான்.
ஆனால் அன்பையும் பொறுமையையும் உலகிற்கு உபதேசித்த,
ஒரு மகானின் வழிவந்தவர்களாய்ச் சொல்லிக்கொண்டு,
மதப்பலத்தைப் பெருக்குவதற்காக,
மனிதர்களுக்கிடையே வெறுப்பையும், பகையையும் உருவாக்கும்,
இவர்களது செயலே கண்டனத்திற்கு உரிய விடயமாகிறது.
தமது சமயம் வளர்க்க, மற்றைய சமயத்தை அழிக்க நினைக்கும்,
இவர்தம் செயற்பாடுகள் பற்றி அடுத்தவாரம் சொல்கிறேன்.

*****

(மிகுதி அடுத்தவாரத்தில்)

# ஐந்து மணித்தியாலங்களில் யாழ். வரவுள்ளதாம் ரயில்!

## அதற்கேற்றவாறு பாதையை சீரமைப்பதற்கு அரசு முடிவு



கொழும்பு, டிசெ. 21

கொழும்பில் இருந்து 5 மணித்தியாலங்களில் யாழ்ப்பாணத்துக்குப் பயணிக்கக் கூடிய வகையில், வடக்கு ரயில் மார்க்கத்தை புனரமைக்கவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மஹவயிலிருந்து ஓமந்தை வரையான ரயில் பாதை சீரின்மையால், ரயில் போக்குவரத்து மந்தகதியிலேயே முன்னெடுக்கப்படுவதாக ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

பொல்கஹவெல வரை மாத்திரம் காணப்படும் இரண்டு ரயில் பாதைகள் அடங்கிய மார்க்கத்தை மஹவ வரை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டு வருடங்களுக்குள் வடக்கு ரயில் மார்க்கத்தைப் புனரமைக்கும் பணிகளை நிறைவு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# வலப்பனை,இலுப்பத்தன பிரதேசங்களில் மண்சரிவு



கொழும்பு, டிசெ. 21

நுவரெலியா, வலப்பனை – மலபட்டாவ மற்றும் இலுப்பத்தன ஆகிய பிரதேசங்களில் நேற்று ஏற்பட்டுள்ள மண்சரிவு காரணமாக அந்தப் பகுதியில் வசிக்கும் 45 குடும்பங்களைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இவர்கள் தற்காலிகமாக இலுப்பத்தன பிரதேச கலாச்சார மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட இவர்களுக்கான நிவாரண உதவிகளை வலப்பனை பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

(ஐ)



# 9 வயதுடைய சிறுமி துன்புறுத்தல்; அர்ச்சகரின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 21

9 வயதுடைய நான்காம் தரத்தில் கல்வி பயிலும் மாணவியைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆலய அர்ச்சகர் உள்ளிட்ட இருவரது விளக்கமறியலையும் வரும் 30ஆம் திகதிவரை நீடித்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கடந்த நவம்பர் 27ஆம் திகதி பாடசாலையில் சிறுமி அலைபேசி வைத்திருப்பதை ஆசிரியர் கண்டறிந்தார். இது தொடர்பில் சிறுமியிடம் விசாரித்தபோது, வல்வெட்டித்துறை ஆலயம் ஒன்றின் அர்ச்சகர் வாங்கிக் கொடுத்தார் எனவும் அவர் அலைபேசி மூலம் பிரசாதம் தரக் கூப்பிடுவார் என்றும் சிறுமி கூறியுள்ளார்.

சிறுமியின் தகவலில் சந்தேகம் கொண்ட ஆசிரியர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு அறிவித்தார். அவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து உடனடியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அர்ச்சகர் தன்னை ஆலய மடப்பள்ளியில் வைத்துத் துன்புறுத்தலுக்குள்ளாகினார் எனவும் தனக்கு அதிகளவான பணத்தை அவர் தந்தார் எனவும் சிறுமி விசாரணையில் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் தனது சித்தப்பா ஒருவரும் இவ்வாறு தன்னை துன்புறுத்துகிறார் என்றும் சிறுமி தெரிவித்திருந்தார்.

அத்துடன், அர்ச்சகரால் வழங்கப்பட்ட பணம் ஒரு தொகையையும் சிறுமி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

சிறுமியின் அலைபேசி சிம் அட்டை அர்ச்சகரின் பெயரிலேயே இருந்துள்ளது.

இந்த நிலையில் சிறுமியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் 72 வயது அர்ச்சகரும் சிறுமியின் சித்தப்பாவான 50 வயதுடைய குடும்பத் தலைவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இருவரும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் கடந்த 30ஆம் திகதி முற்படுத்தப்பட்டனர்.

அன்றிலிருந்து சந்தேகநபர்கள் இருவரும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்

இந்த வழக்கு பருத்தித்துறை நீதிமன்றில் பதில் நீதிவான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர்கள் இருவரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தாவும் பாதிக்கப்பட்ட சிறுமியின் நலன் சார்பில் சட்டத்தரணி கே.சுகாஷும் முன்னிலையானார்கள்.

சிறுமியின் வாக்குமூலமும் அவரது சட்ட மருத்துவப் பரிசோதனை அறிக்கையும் மன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை.

முதலாவது சந்தேகநபர் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா, பிணை விண்ணப்பம் செய்ய மன்றின் அனுமதி கேட்டார். சிறுமியின் நலன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கே.சுகாஷும் தனது ஆட்சேபனையை முன்வைக்க மன்றின் அனுமதியைக் கோரினார்.

சட்ட மருத்துவப் பரிசோதனை அறிக்கை மன்றுக்கு கிடைக்காத்தால் பிணை விண்ணப்பத்தை நிரந்தர நீதிவான் முன்னிலையில் முன்வைக்க அறிவுறுத்திய பதில் நீதிவான், சந்தேகநபர்களின் விளக்கமறியலை வரும் 30ஆம் திகதிவரை நீடித்து உத்தரவிட்டார். (ஐ - 07)

# சிறைச்சாலையில் துப்பாக்கிச் சூடு! கைதி காயம்!!



கொழும்பு, டிசெ. 21

வாரியபொல சிறைச்சாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கைதி ஒருவரினாலேயே இந்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த சிறைக் கைதி தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

போதைப்பொருள் கடத்தல் வியாபாரத்துடன் தொடர்புடையதாக இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இதுகுறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# பாதுகாப்பு கருதி இங்கு வரமுடியாதோருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை கொடுக்கவேண்டும்

## இந்தியாவிடம் கோருகிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.



வவுனியா, டிசெ. 21

இலங்கையில் ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு வரும்வரை பாதுகாப்பு கருதி இங்கு வரமுடியாதவர்களுக்கு இந்திய அரசு இரட்டைப் பிரஜாவுரிமை செய்து கொடுக்கவேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் ஊடகவியலாளரைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 18 ஆம் திகதி தமிழரசுக் கட்சியின் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் சம்பந்தன் ஐயா தெரிவித்த கருத்து ஒன்று ஊடகங்கள், புலம்பெயர் மக்கள், சமூக வலைத்தளங்கள் மத்தியில் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளது போராட்டம் அழிக்கப்பட்டது ஒரு நல்ல விடயமாகும் என்று அவர் தெரிவித்த கருத்தானது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் போராட்டம் அழிக்கப்பட்டது நல்ல விடயம் என்று தெரிவிக்கும் சம்பமந்தனும் இதில் உடந்தையாக இருந்தாரா, இருக்கிறாரா என்ற கேள்வி எல்லோர் மத்தியிலும் இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளது போராட்டம் அல்லது இளைஞர், யுவதிகளின் தியாகங்கள் பற்றி தமிழரசுக் கட்சி சார்ந்தவர்கள் சிலர் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் அவர்களைப் புகழ் பாடுவதும், கூட்டமைப்பில் இருக்கக் கூடிய சம்பந்தன் ஐயா போன்ற சிலர் அந்த போராட்டத்திற்கும், அந்த தியாகத்திற்கும் எதிராகக் கடுமையான கருத்துக்களை தெரிவிப்பதும் என்பது ஒரு புதிய விடயமல்ல. இந்தக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு கடந்த 18 வருட காலத்தில் நீண்டகாலம் நான் இந்த கூட்டமைப்புக்குள் இருந்தவன் என்ற வகையில் ஈழவிடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த போராளிகள், பொதுமக்களது தியாகங்களைக் காலத்திற்கு காலம் தேர்தல் காலத்தில் பயன்படுத்துவதும், தேர்தல் முடிந்த பிற்பாடு தியாகங்களைக் காலுக்குள் போட்டு மிதிக்கின்ற சம்பவங்களும் இடம்பெற்றமையை அவதானித்துள்ளேன். இது புதிய விடயமல்ல.

நாடாளுமன்றத்துக்குள் சம்பந்தன் ஐயா தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பாக ஆற்றிய உரைகள் அவர்கள் பயங்கரமானவர்கள், கெடூரமானவர்கள், அவர்களை யாரும் அழிக்கவில்லை. அவர்களிடம் ஜனநாயகம் இல்லை, அவர்கள் தங்களால் தாங்கள்தான் அழிந்தார்கள் என்று சொன்னார். தன்னுடைய நண்பர்கள் லஸ்மன் கதிக்காமர் உட்பட பலரை அவர்கள் படுகொலை செய்துள்ளார்கள். ஆகவே அவர்கள் கொடூரமான இயக்கம் என்றும் தெரிவித்திருந்தார். இது நாடாளுமன்ற கன்சாட்டிலும் இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் ஆயுதப்போராட்டம் உச்சக் கட்டம் அடைந்து கொண்டிருந்த காலகட்டத்தில் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல்வேறுபட்ட இராஜதந்திரிகளின் சந்திப்பிலும் கூட இந்தப் போராட்டத்தைப் பற்றியும், போராளிகளைப் பற்றியும் மிக மோசமான கருத்துக்களை தெரிவித்திருக்கின்றார். இந்த விடயங்கள் எமக்குத் தெரியும். இவர்களுடன் இராஜதந்திர சந்திப்புக்களில் சென்றிருக்கின்ற சில தலைவர்கள் சந்திப்பு முடிந்த பிற்பாடு இவர் அவ்வாறு கடுமையான கருத்தைத் தெரிவித்திருந்தார், அதற்குப் பதிலாக நாங்கள் அந்தப் போராட்டத்தையும், தியாகத்தையும் நியாயப்படுத்திச் சொன்னோம் என்றும் கூறியிருக்கிறார்கள்.

ஆகவே விடுதலைப் போராட்டத்தின்ய தியாகங்களைக் கூட்டமைப்புக்குள் இருக்கக் கூடிய சில தலைவர்கள் மிக மோசமாக இழிவுபடுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது. நாங்களும் போராட்ட இயக்கதின் ஊடாக வந்தவர்கள் என்ற அடிப்படையில் எந்த இயக்கமாக இருந்தாலும் அந்தத் தியாகங்கள் மதிக்கப்பட வேண்டிய தேவைப்பாடு இருக்கிறது. ஆயுதப் போராட்டத்தின் ஊடாக வந்த இரண்டு பங்காளிக் கட்சிகளை வைத்துக் கொண்டும், விடுதலைப்புலிகள் மீது கரிசனை இருப்பதாகப் பேசுபவர்களை வைத்துக் கொண்டும் நாடாளுமன்றக் குழுக் கூட்டம், கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் என பலவற்றில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார். பல தடவை அவர் சொல்லி வந்திருக்கிறார். இது கண்டனத்திற்குரியது. அவருடைய கருத்துக்கு அவர் சார்ந்தவர்கள் பல்வேறு வியாக்கியானங்களை சொல்லலாம். அவர் சொன்ன அர்த்தம் வேறு. உண்மையாக அப்படி சொல்லவில்லை என சொல்லலாம். அப்படி சொல்பவர்கள் யுத்தம் நிறைவடைந்த பின்னர் தான் திருகோணமலை சென்று வருகின்றேன் என்றால் அதற்கு மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தை முடித்து வைத்ததே காரணம் எனக் கூறியமையையும், அவர் காலத்திற்கு காலம் மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிக்கா, ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன போன்றவர்களை புகழாரம் சூட்டியமையையும் புரிந்து கொள்ள வேண் டும். ஆகவே தேர்தல் நெருக்கும் காலத்தில் இவர்களு டைய இந்த மாதிரியான பசப்பு வார்த்தைகளை தமிழ் மக்களும், ஆயுதம் தூக்கிய கட்சிகளும் வன்மையாகக் கண்டிக்கவேண்டும். ரெலோ, புளொட் என்பனவும் பதில் அளிக்க வேண்டும். எனவே இவற்றுக்கு தமிழ் மக்கள் ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டிய காலம் வந்துள்ளது.

கூட்டமைப்பில் ஆயுதம் தூக்கிய இரண்டு கட்சிகள் இருக்கின்றன. அவர்களுக்கு இரா.சம்பந்தன் அவர்கள் நாடாளுமன்ற உரைகளில் பேசிய விடயம், இராஜதந்திரிகளுடன் பேசிய விடயம் எல்லாம் தெரியும். விடுதலைப் புலிகளால் கூட்டமைப்பு உருவாக்கப்படவில்லை என்று தனியார் தொலைக்காட்சிக்கும் தெரிவிருந்தார். ஆகவே கூட்டமைப்பில் உள்ள ரெலோ, புளொட் போன்ற ஆயுதம் ஏந்திய கட்சிகள் இவருடைய இந்த கருத்துக்களுக்கு ஆதரவா என்பதை வெளிப்படுத்த வேண்டும் – என்றார்.

இதன்போது சிறிகாந்தா தலைமையிலான குழு புதிய கூட்டணியில் இணையக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றதா என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போது –

விக்னேஸ்வரன் ஐயாவின் தலைமையில் கொள்கை சார்ந்த மாற்றுத் தலைமைக்கான கூட்டமைப்பை உருவாக்குவதற்கான பல சந்திப்புக்கள் நடைபெறுகின்றன. அதில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உருவாக்குவது, யாப்பை உருவாக்குதல், கொள்கை சார்ந்து மக்களுக்கான புதிய அரசியல் தலைமை ஒன்றை உருவாக்குவது தொடர்பாக நாங்கள் நீண்ட நாள்களாக விக்கினேஸ்வரன் ஐயாவுடன் ஒன்றாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த பயணத்தில் எமது கொள்கைகளை ஏற்றுக் கொண்டு வருபவர்கள் இணைந்து பயணிக்கலாம். குறிப்பாக சிறிகாந்தா, சிவாஜிலிங்கம் போன்றவர்களும் எமது இந்த கூட்டோடு இணைந்து பயணிப்பார்கள் – என்றார்.

இதன்போது, தமிழ் நாட்டில் உள்ள தமிழ் அகதிகள் தொடர்பாக உங்களது நிலை என்ன என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போது,

இந்த நாட்டை விட்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தமிழ் நாட்டில் பல்வேறு முகாம்களில் இருக்கும் எங்களுடைய அகதிகள் பலர் இந்த நாட்டுக்கு திரும்ப இருக்கிறார்கள். இன்னும் சிலர் நாட்டுக்கு திரும்ப முடியாத நிலையில் இருக்கிறார்கள். இடம்பெயர்ந்து சென்றவர்களது காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. பலருக்கு குடியிருப்பதற்கான காணிகள் இல்லை. ஏற்கவே இங்கு குடியேற வந்தவர்களுக்கான வீட்டுத்திட்டங்கள், காணிகள், அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. அவர்கள் நாடு திரும்ப வேண்டும். அவர்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். ஏற்கனவே வந்தவர்களுக்கே வசதிகள் செய்து கொடுக்கப்படாத நிலையில் அங்கு இருப்பர்கள் இங்கு வந்து என்ன செய்ய முடியும் என்ற ஒரு பிரச்சினை இருக்கிறது. இந்த நிலையில் இந்தியாவின் மத்திய அரசு இந்தியாவில் இருக்கும் அகதிகளுக்கு குடியுரிமை வழங்க முடியாது என தெரிவித்துள்ளது. எங்களைப் பொறுத்த வரை இலங்கையில் ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு வரும்வரை பாதுகாப்பு கருதி இங்கு வரமுடியாதவர்களுக்கு இந்திய அரசு இரட்டை பிரஜாவுரிமை செய்து கொடுக்க வேண்டும் – என்றார். (ஐ – 100)

# மத்தள விமான நிலையத்தை இந்தியாவுக்கு வழங்காது அரசு

## ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு



மத்தள விமான நிலையம் இந்தியாவுக்கு வழங்கப்படாது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தியாளர்களை நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்தித்தபோது, மத்தள விமான நிலையம் இந்தியாவின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படுமா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், மத்தள விமான நிலையம், நாட்டின் மாற்று அனைத்துலக விமான நிலையமாக இலங்கைவிமான நிலைய அதிகார சபையினால் அபிவிருத்தி செய்யப்படும்.

இந்தத் திட்டம் குறித்து இந்தியாவுடன் எந்த கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை.

அதேவேளை, இந்திய நிறுவனங்கள் குறிப்பாக, தகவல் தொழில்நுட்பத் துறையில் முதலீடு செய்வதை வரவேற்கிறோம் என்று தெரிவித்தார். (ஐ)



# ஒற்றுமைக்குக் குறுக்கே நிற்பவர் சம்பந்தன்தான்!

## ஈ.பி.ஆர்.எல்.எவ். பரபரப்புக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 21

தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிளவுக்குக் காரணமாகவும் ஒற்றுமைக்குத் தடையாகவும் இரா.சம்பந்தன் குழுவே இருக்கின்றது எனக் குற்றம்சாட்டியுள்ளது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.

அத்துடன், தமிழ் மக்கள் தங்களுக்கே மீண்டும் ஆணை வழங்கவேண்டும், புலிகள் அழிக்கப்பட்டது நல்லது என்று தமிழரசுக் கட்சியின் 70வது ஆண்டு நிறைவில் சம்பந்தன் தெரிவித்த கருத்துக்களுக்கும் பதிலடி கொடுத்துள்ளது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த 18ஆம் திகதி நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் தமிழரசுக் கட்சியின் 70ஆவது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. இதில் தமிழரசுக் கட்சியின் பல தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர். இந்தக் கூட்டத்தில் சம்பந்தன் பல்வேறுபட்ட விடயங்களை உள்ளடக்கி நீண்ட உரை ஒன்றை ஆற்றியிருந்தார்.

தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு எழுபது வருடங்கள் ஆகியிருக்கலாம். 1976ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2004ஆம் ஆண்டுவரை கடந்த 28 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி உறங்கு நிலையிலேயே இருந்தது. 2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்காக தமிழரசுக் கட்சியின் சின்னம் மீண்டும் கொண்டுவரப்பட்டது. இது ஒருபுறமிருக்க, சம்பந்தன் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக தாங்கள் பல விடயங்களைச் சாதித்திருக்கின்றனர் எனவும் சர்வதேச ரீதியான ஒப்புதல்களை எழுத்து மூலம் தாங்கள் பெற்றிருக்கின்றனர் எனவும் தாங்கள் நீண்ட அனுபவசாலிகள் என்றும் மக்கள் தொடர்ச்சியாக தங்களுக்கே ஆதரவு தந்திருக்கிறார்கள் என்றும் தொடர்ந்தும் தங்களுக்கே ஆதரவு தர வேண்டும் என்று கூறியிருக்கின்றமையுடன், தங்களால் மாத்திரமே அதிகாரப்பகிர்வை ஏற்படுத்திக்கொள்ள முடியுமென்றும் ஏனையோரால் இவ்விடயங்களைக் கையாள முடியாதென்றும் கூறியிருக்கின்றமையுடன், தங்களால் மாத்திரமே சர்வதேச சமூகத்தினதும் இந்தியாவினதும் ஆதரவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற தோரணையிலும் பேசியிருக்கின்றார்.

2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தினூடாகவும் சர்வதேச மட்டத்திலும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்தது. அது வெறுமனே சம்பந்தன் தொடர்புபட்ட விடயமாக இருக்கவில்லை. அந்தக் காலத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவை இணைந்தே சர்வதேச ரீதியாகவும் நாடாளுமன்றத்திலும் தமிழ் மக்களின் உரிமைகளுக்கான போராட்டங்களை ஜனநாயக வழியில் முன்னெடுத்து வந்திருந்தனர். தனித் தமிழரசுக் கட்சியோ அல்லது சம்பந்தனோ இதற்குத் தனித்து உரிமைகோர முடியாது.

2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதற்குப் பின்னர், தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்காகப் போராடுவதற்கான முழுப்பொறுப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேல் வந்திறங்கியது. அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய நிலையில் தமிழரசுக்கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய மூன்று கட்சிகள் மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் பெற்றிருந்தன. இந்தக் காலகட்டத்தில்தான், மஹிந்த அரசாங்கத்துடன் பதினெட்டு சுற்றுப் பேச்சு நடைபெற்று அவை தோல்வியில் முடிவடைந்தன. இதே காலகட்டத்தில் திரு.சுமந்திரன் அவர்கள் மஹிந்தவுடன் இணைந்து கிரிக்கெட் விளையாடியமையும் திரு.சம்பந்தன் சுதந்திரதின கொண்டாட்ட நிகழ்வில் பங்கேற்றமையும், ரணிலை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து மேதினம் நடத்தி அதில் சிங்கக் கொடியை கையில் ஏந்திய நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

இந்த விடயங்கள் அனைத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் பங்காளிக் கட்சிகளினதும் எதிர்ப்பிற்கு மத்தியில் திரு.சம்பந்தனால் மேற்கொள்ளப்பட்ட தன்னிச்சையான முடிவுகளாகவே இருந்தன. இவ்வாறான சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துவதற்காக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தை (புளொட்)யும் கூட்டமைப்பின் அங்கத்தவராக இணைத்துக்கொண்டோம்.

அதேசமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தும் நோக்கமாக அதற்கான யாப்பு ஒன்றினைத் தயாரிக்கவும் அதனைப் பதிவு செய்வதற்குமாக பல்வேறுபட்ட கலந்துரையாடல்களை கூட்டமைப்பிற்குள் தொடர்ச்சியாக நடத்தி வந்தோம். தமிழரசுக் கட்சியின் தலைமை சாக்குப்போக்குச் சொல்லி அதனை முற்றிலும் நிராகரித்தது. இன்று வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது எது விதக் கட்டமைப்புமற்ற, யாப்பு எதுவும் இல்லாத தேர்தல் ஆணையத்தால் பதிவு செய்யப்படாத, ஒரு கூட்டாகவே இருந்து வருகின்றது.

2015ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலின் பின்னர், இவர்கள் எடுத்த அனைத்து முடிவுகளும் தமிழ் மக்களை மேலும் மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் முடிவுகளாகவே அமைந்திருந்தன. பிரத்தியேகமாக ஜெனிவா மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கை அரசாங்கத்திற்குப் பெற்றுக் கொடுத்த கால அவகாசங்களானவை தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த விடாமல், ஒரு தடுப்பணையை ஏற்படுத்தியிருந்தன. இதனால் மைத்திரி-ரணில் கூட்டு அரசு பாதுகாக்கப்பட்டதே தவிர, தமிழ் மக்களுக்கான நீதியை நோக்கிய பயணத்தில் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டமுடியவில்லை. அதைப் போலவே, உள்நாட்டிலும், அரசைப் பாதுகாப்பதை முழுமுதல் நோக்கமாகக் கொண்டு தமிழ் மக்களுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய அனைத்து வரவு-செலவுத் திட்டங்களுக்கும் இவர்களால் ஆதரவு வழங்கப்பட்டது. அதற்குச் சொல்லப்பட்ட காரணம்: ஒரு புதிய அரசியல் சாசனம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவேண்டும் என்றும் அதற்கு இந்த அரசு தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதாகவே அமைந்திருந்தது.

நீதிமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் சர்வதேச அமைப்புக்களிலும் இலங்கை அரசைப் பாதுகாத்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் இவர்கள் கூறிவந்த புதிய அரசியல் சாசனம் என்பதை இறுதிவரை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியவில்லை. இதற்குக் கூட்டு அரசின் செயற்பாடுகள் ஒரு வகையில் காரணமாக இருந்தாலும் மைத்திரி - ரணில் அரசை இவர்கள் சரியான முறையில் கையாளத் தவறியமையும் புதிய அரசியல் சாசனத்தைக் கொண்டுவரமுடியாமைக்கான காரணம் ஆகும்.

பௌத்தத்திற்கு முதலிடம் என்பதை ஏற்றுக்கொண்டும், வடக்கு - கிழக்கு இணைப்பை விட்டுக்கொடுத்தும், சமஷ்டியைக் கைவிட்டும்கூட இவர்களால் ஒரு அரசியல் சாசனத்தைக் கொண்டுவர முடியவில்லை. புதிய அரசியல் சாசனம் மட்டுமன்றி, குறைந்தபட்சம் அரசியல் கைதிகளின் விடுதலையையோ, காணிகளை முழுமையாக விடுவிப்பதிலோ அல்லது ஏனைய நெருக்கு வாரங்களிலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றுவதிலோகூட இவர்களால் எதனையும் சாதிக்க முடியவில்லை.

நீராவியடி பிள்ளையார் கோவில், வெடுக்குநாறி சிவன், கன்னியா வெந்நீரூற்று போன்ற புராதன ஆலயங்களைப் பாதுகாப்பதற்குக்கூட மக்கள் வீதியில் போராட வேண்டியிருக்கின்றதே தவிர, இவர்களது இணக்க அரசியல் மூலம் எதனையும் சாதிக்க முடியவில்லை. இவ்வாறான சூழ்நிலையில்தான் திரு.சம்பந்தன் அவர்கள் தமக்கு மாத்திரம் மீண்டும் ஒருமுறை மக்கள் ஆணை வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்.

*'2009ஆம் ஆண்டிற்குப் பின்னர் நடைபெற்ற அனைத்து நாடாளுமன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சிமன்றத் தேர்தல் என்பவற்றில் எமது மக்கள் எங்களை ஆதரித்து இருந்தார்கள். இவை தொடரவேண்டும். நாங்கள் கையாளவேண்டிய கடமைகள், நாங்கள் பொறுப்பெடுக்க வேண்டிய கடமைகள் எதிர்காலத்தில் சர்வதேசரீதியாகவே உள்நாட்டிலும் நாங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் உள்ளன. இவற்றை நாங்கள் நிறைவேற்றுவதாக இருந்தால் உங்கள் ஆணையை நாங்கள் முழுமையாகப் பெறவேண்டும். அந்த ஆணையின் ஒருபகுதி யாருக்கும் போய்விடக்கூடாது. இது முக்கியமாகும். அத்தியாவசியமாகும். எனவே அனைவரும் எழுபது ஆண்டுகாலமாக ஒரு நீண்ட பயணத்தில் ஈடுபட்டிருக்கின்றோம். நாங்கள் எங்கு போகின்றோம் என்பது எங்களுக்குத் தெரியும். அந்த இலக்கை அடைவதற்கு எதைச் செய்ய வேண்டும் என்று வாக்குறுதிகள் பெற்றுப் பகிர்ந்துள்ளோம். அது நிறைவேற்றப்படவேண்டும்.'* -என்று சம்பந்தன் உரையாற்றியிருக்கிறார்.

சம்பந்தனின் நீண்ட உரையில் மேற்கண்ட விடயம் ஒரு சிறுபகுதி மாத்திரமே. தாங்கள் சர்வதேச சமூகத்திடமிருந்து எழுத்துமூலமான உத்தரவாதங்களைப் பெற்றிருக்கின்றார்கள் எனக் கூறுகின்றார்கள். அவ்வாறாயின், அந்த எழுத்து மூலமான உத்தரவாதங்கள் என்ன என்பதை இவர் வெளிப்படுத்தத் தயாரா?

ஏற்கனவே மக்கள் தங்களுக்குத் தொடர்ச்சியாக ஆணையை வழங்கி வந்துள்ளனர் என்றும் கூறியிருக்கின்றார். இவர் தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு விசுவாசமாக நடந்துகொண்டாரா? தமிழ் மக்களுக்கு உரித்தான உரிமைகள் எதனையாவது பெற்றுக்கொடுத்தாரா? கடந்த நான்கரை வருடங்களாக அவர் எடுத்த முடிவுகள் அனைத்தும் தோல்வியில் முடிந்ததற்கான காரணத்தைப் பரிசீலித்தாரா? அதிலிருந்து பாடங்கள் எதனையும் கற்றுக்கொண்டாரா?

இப்பொழுது மீண்டும் ஒருமுறை முழுமையான ஆணை வேண்டுமெனக் கேட்கிறார். ஒரு பகுதிகூட யாருக்கும் போய்விடக்கூடாது என்றும் கூறுகிறார். இத்தகைய புதிய ஆணையினூடாக எதனையாவது சாதிப்பதற்கான திட்டங்களோ, வழிகாட்டல்களோ, அதற்கான வியூகங்களோ உங்களிடம் இருக்கின்றனவா?

'விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டது நல்ல விடயமாக இருக்கலாம்' என்ற ஒரு கருத்தையும் திரு.சம்பந்தன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டது நல்லதென்று சம்பந்தன் கருதுவாரானால் விடுதலைப் புலிகள் மௌனிக்கப்பட்டதன் பின்னரான கடந்த பத்து வருடத்தில் அவர் எதனைச் சாதித்தார்? விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டது நல்லது என்று கூறுவதானது ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்டது நல்லதொரு விடயமாக இருக்கலாம் என்றே பொருள்படும். ஆயுதப் போராட்டம் என்பது சிங்கள - பௌத்த மேலாதிக்க சக்திகளிடமிருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கான போராட்டமே தவிர, அது ஒரு பயங்கரவாத நடவடிக்கையல்ல. வெளிநாட்டு நீதிமன்ற வழக்குகளில்கூட விடுதலைப் புலிகள் உரிமைகளுக்காகப் போராடுகின்ற அமைப்பே தவிர பயங்கரவாத அமைப்பல்ல என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆகவே இதில் எது சரி என்பதை சம்பந்தன் அவர்கள்தான் தெளிவுபடுத்தவேண்டும்.

விடுதலைப் புலிகள் மட்டுமன்றி, ஏனைய விடுதலை அமைப்புகளும்கூட, தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்காக தமது இன்னுயிரை ஈந்திருக்கிறார்கள். பல்வேறு தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்களின் தியாகங்களின்மீது நின்றுதான் நாம் தமிழ் மக்களின் உரிமைகள் குறித்துக் குரல்கொடுக்கின்றோம் என்பதை சம்பந்தன் மறந்துவிடக்கூடாது.

நீங்கள் சொல்வது அத்தனையும் சரியென்று நினைக்காதீர்கள். உங்களது ஒவ்வொரு நடவடிக்கையையும் தமிழ் மக்கள் மிகவும் அவதானமாக அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து நீங்கள் கருத்துக்களை வெளியிடுவது நல்லதென்பதுடன், மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றமுடியும் எனக் கருத வேண்டாம் என்றும் தங்களை வினயமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது உதடுகள் ஐக்கியத்தை உச்சரிக்கின்றபோதிலும் உங்களது தன்னிச்சையான செயற்பாடுகள் எப்பொழுதும் ஐக்கியத்திற்குக் குந்தகமாகவும் எதிராகவுமே இருக்கின்றன. உங்களது செயற்பாடுகளும் அணுகுமுறைகளுமே ஒரு மாற்றுத் தலைமைக்கான அவசியத்தை வலியுறுத்தியுள்ளன. தமிழ் அரசியல் தலைமைகள் அடுத்தகட்ட அரசியலை முன்னெடுத்துச் செயற்படவேண்டிய நிலையில், மீண்டும் ஒரு புதிய ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்புவதில் நேரத்தைச் செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தங்களாலேயே உருவானது என்பதைத் தங்களுக்குச் சுட்டிக்காட்ட விழைகிறோம். இதற்கான முழுப்பொறுப்பையும் தாங்களே ஏற்கவேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.12.2019 இல் வெளியிடப்பெற்றது.